# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில்...

ISSN 2792-1026

www.magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com Thuninthelu Magazine

மாதந்தோறும் | இதழ் - 43 | 25 செப்டம்பர் 2025

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மருதாணிப் போட்டி



சமூக வலைத்தள பிரபலமாக வலம் வரும் அக்ஸான்



சிறுவர்களின் பாதுகாப்பில் பெரியோர்களின் பங்களிப்பு !



தற்கால உலகை நிர்வகிக்கும் நவீன தொழில்நுட்பம்



பேசும் பேனாக்கள்

நூல் :- பிழையழகு
நூல் :- பொற்கரம்



இலங்கை எழுத்தணிக் கலையில் சிறந்து விளங்கும் அமீர் ஃபைஸல் அவர்களுடனான நேர்காணல்

ADVERTISEMENT

AL-BASID TRAVEL
MANPOWER RECRUITMENT
12-B,3rd FLOOR,DAMBULLA ROAD,KURUNEGALA
074 300 4800
VACANCY IN
QATAR

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்

**Sky Tamil Media Network (Pvt) Ltd**

ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්

REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



**ஜே.எம்.பாஸித்**

ஸ்தாபக பணிப்பாளர்

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை



**பொது முகாமையாளர்**

ஹுபைப் முஸம்மில்



**பிரதி முகாமையாளர்**

அஸ்ரி இப்னு அமீர்



**பிரதம ஆசிரியர்**

எம்.எஸ்.எம்.ஸாகிர்

## ஆலோசகர்கள் :

புரவலர் ஹாசிம் உமர்

தெ. செந்தில்வேலவர் – பிரதம ஆசிரியர் தினகரன்

கலாபூஷணம் நூருல் அமீன் நஜ்முல்

கவிஞர் நஜ்முல் ஹுசைன்

ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) – கத்தார்

மொஹமட் சாலிஹீன் – சிரேஸ்ட வானிலை அதிகாரி

றியாத் ஏ மஜீத் – சிரேஸ்ட ஊடகவியலாளர்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

**பிரதி முகாமையாளர்:**

அஸ்ரி இப்னு அமீர் – துணிந்தெழு சஞ்சிகை

**உதவி முகாமையாளர்:**

ஹப்ஸா பஹுமீர் – துணிந்தெழு சஞ்சிகை

சி. கற்பஹாசினி – துணிந்தெழு சஞ்சிகை

**நிர்வாக குழு:**

ஜபீர் எம் மஹ்ரூப் – பிரதி முகாமையாளர், ஸ்கை தமிழ்

ஆஷிகா பர்சான் – பிரதி முகாமையாளர், ஸ்கை லங்கா

**பிரதம ஆசிரியர்:**

எம்.எஸ்.எம்.ஸாகிர்

**இணையாசிரியர்கள்:**

குலசிங்கம் கிலசன் – கல்முனை

முனீரா வாஹித் – பதுளை

மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி

ஜவ்சன் அஹமட் – மருதமுனை

**ஆசிரியர் குழு :**

எம்.பஹத் ஜுனைட் – காத்தான்குடி

ஏ.எம். கஸ்பியா வீவி – கல்முனை

பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்

றிஹானா இஷாக் – கம்பளை

மொஹமட் நிப்ராஸ் – வாழைச்சேனை

றுக்ஷானா யஹியா – பாணந்துறை

அஷ்ரிஃபா ஆரிப் – காவத்தமுனை

**வடிவமைப்பாளர்கள்:**

ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் – அம்பாறை

எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

**இணையத்தளம் மற்றும் சமூக வலைதளம் பொறுப்பாளர்:**

அஸ்ரி இப்னு அமீர் – அட்டாளைச்சேனை

எம்.பஹத் ஜுனைட் – காத்தான்குடி

ஜவ்சன் அஹமட் – மருதமுனை

எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

## ஆசிரியர் கருத்து......

# வழி தேடும் சமூகம்

"கல்வி" முச்சந்தியில் சந்திக்கும் முகமறியா மனிதர்களை சமூக வட்டத்துள் வேறுபிரித்துப் பார்க்கும் ஒரு தேடல் கருவியாகும். கல்வி என்ற இந்த ஒற்றை சொல்லானது தன்னகத்தே ஆழியைப் போல் ஆழமான ஒரு பரப்பினை கொண்டுள்ளது.

பாறைகளையும் எரிமலைகளையும் கடந்து ஆழியின் அலை கரையை தொடுவது போல "கல்வி" எனும் ஆயுதமே சமூகத்தின் சவால்களையும் போராட்டங்களையும் கடப்பதற்கான மேம்பாலமாகும். யுகங்களாக சுற்றிக் கொண்டிருக்கும் பூமியானது இன்று ஒரு எல்லையை கடந்து வருவதும் கல்வியின் புரட்சியால் ஆகும். கல்வி எனும் மூன்றெழுத்து இல்லையேல் இன்று நானும் நீங்களும் எத்தகைய ஒரு வாழ்வை வாழ்ந்து கொண்டிருப்போம் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

மாற்றம் என்ற ஒன்றினை வேண்டி நிற்கும் இத்தருணத்தில், அதனைச் சமூகத்தில் நுழைவிக்கச் செய்து கறைபடிந்த இடங்களை தூசுதட்டும் பொறுப்பினை கல்வியே தன் முதுகெலும்பில் சுமந்துள்ளது. இத்தகைய ஒரு பாரிய பொறுப்பினை கல்வியானது தன்னகத்தே கொண்டு அதிலே வெற்றியும் கண்டுள்ளது என்பதை வரலாறு நிரூபிக்கின்றது. கீழே விழுந்த அப்பிள் பழத்தின் சுவையை உணர முன்னர் ஏன் அது மேலே செல்லாமல் கீழே விழுந்தது என்ற மர்மத்தை தேடி அறிந்ததால் தான் இன்று நாம் கல்வி எனும் பயணப்பாதையில் சீரிய ஒரு தெளிவினை கண்டுள்ளோம். நியூட்டன் அன்று தேடிய கல்வியின் மையப்புள்ளியே, சந்திரனில் பொருட்கள் மிதப்பதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு விண்ணை எட்டிய கல்வியானது இன்று சமூக மாற்றம் என்று தன் பயணப்பாதையை விரிவாக்கி அகலக்கால் வைக்கிறது.

இங்கு நாம் கல்வி என்று கூறுவது வெறுமனே பாடசாலை கல்வியோ அல்லது அதனையும் தாண்டிய புத்தகக் கல்வியையும் மாத்திரம் அல்ல. மாறாக, கல்வி என்று வரும்போது, அங்கு மகுடம் சூடி அனைத்தையும் தோற்கடிக்க செய்வது அனுபவம் எனும் கல்வியாகும். இன்று சமூகம் ஒரு புதிய பாதையில் அடியெடுத்து வைக்கின்றது என்றால், அது ஒருவனின் உள்ளத்தில் வேரூன்றும் உணர்வுகளும் அதற்காய் அவன் நடந்து போகும் கரடுமுரடான பாதைகளுமாகும். வாழ்வின் ஆரம்பத்தில் தாய்மடியில் சொல்லும் ஆயிரமாயிரம் கற்பனை கதைகளே, அவனுக்கு ஆரம்பக் கல்வியாக மாறிவிடும் என்றால் பிழையல்ல அறிவாலும் அனுபவத்தாலும் வேரூன்றும் கல்வியின் மூலமே, சமூகத்தை சீர்திருத்தம் என்ற ஒரு வரையறைக்குள் அடக்க முடியும்.

நேர்த்தியான சூழல், நம்பிக்கையான பிரஜை, ஆரோக்கியமான சூழல் என்பன கல்வியின் மூலம் தத்தெடுக்கப்படும் செல்வங்களாகும். எனவே, கல்வி என்ற இரத்தத்துளிகள் உடம்பில் ஆரோக்கியமான முறையில் செலுத்தப்பட்டால்தான், அமைதியான நிம்மதியான சூழல் உருவாவதுடன் அனைவரும் எதிர்காலத்தில் சுதந்திரமான காற்றை சுமைகளின்றி சுவாசிக்க முடியும் என்பதில் துளியளவும் ஐயமில்லை.

**எம்.எச்.எம். ஷிப்கான்** (மஹாஸினி)
இஸ்லாமிய சிந்தனைகள் மற்றும் நாகரிகத் துறை,
கலைமாணி (சிறப்பு) 4ஆம் ஆண்டு மாணவன், SEUSL
ஆசிரியர் – மஹாஸினுல் உலூம் இஸ்லாமிய கல்லூரி – பாலமுனை (இலங்கை)
செயலாளர் – பாலமுனை ஜம்மிய்யதுல் உலமா





# சிறுவர்களின் பாதுகாப்பில் பெரியோர்களின் பங்களிப்பு

மனிதர்களின் வாழ்க்கை ஒரு வட்டம் போன்றதென்பர். எந்தப் புள்ளியில் தொடங்கியதோ அதே புள்ளியில் முடிகின்றது. இதற்கமைய தாய்மடியில் தவழ்ந்த குழந்தைகள் பெற்றோர் பாதுகாப்பில் தங்கி இருப்பது போன்று, வயதான முதியவர்களும் தமது பிள்ளைகள் மற்றும் உறவுகளில் தங்கி வாழும் நிலை காணப்படுகின்றது. கருவிலிருந்து குழந்தை என பிரசவமாகி சிறுவன், இளைஞன், முதியவர் என பருவமும் மாற உருவமும் மாறி மீண்டும் ஒரு குழந்தையாகவே மாறிப் போகிறான்.

இந்த கால மாற்றத்தில் சிறுவர்களை பாதுகாத்து வழிகாட்டல்களை வழங்கி அவர்களை வழிநடத்துவது முதியவர்களின் பொறுப்பாகும். இதனால்தான் என்னவோ ஒக்டோபர் மாதம் 1ம் திகதி சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம் இரண்டும் ஒன்றாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஆரம்ப காலம் தொட்டு சிறுவர்கள் கூட்டுக் குடும்பங்களில் ஒன்றாக வாழ்ந்தனர். இதனால் பாட்டன், பாட்டி, பெரியம்மா, பெரியப்பா, மாமா, மாமி என அதிகம் பேர் ஒன்றாய் இருப்பதால் ஒருவர் இல்லாவிட்டாலும் இன்னொருவர் வழிகாட்டல்களை வழங்கும் தன்மை காணப்பட்டது. இயந்திரமான இக்காலத்தில் தனிக்குடித்தன வாழ்வு அதிகரித்துள்ளதோடு மற்றவர் பற்றி எண்ணிப் பார்க்க நேரமில்லாது, கடிகாரத்தை விட வேகமாக சுற்றிக் கொண்டிருப்பதால் பிள்ளைகள் முறையான வழிப்படுத்தல் இல்லாமல் வழிதவறிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று தொழில்நுட்பம் வளர்ந்து உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கிய காலத்தில் பிள்ளைகள் உடல், உளரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை இவற்றில் இருந்து விடுவித்து ஆளுமை உள்ளவர்களாக கட்டியெழுப்புதல் அவசியமாகும். இன்று உயர்தரம் கற்று பல்கலைக்கழகம் சென்றுள்ள நிலையிலும் பிள்ளைகள் தற்கொலை புரியும் அளவு மனரீதியாக பலவீனமானவர்களாக காணப்படுகின்றனர். இதே போல் தான் சமூக வலைத்தளம், இணையப் பாவனை என்பவற்றில் மூழ்கியும் போதைப்பொருள் பாவனை போன்ற சமூகவிரோத செயல்களிலும் ஈடுபட்டும் தமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி உள்ள நிலை காணப்படுகின்றது. எனவே இவை தொடர்பில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகப் பொறுப்பு

வாய்ந்தவர்கள் என அனைவரும் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

பெற்றோர்களைப் பொறுத்தவரை தமது பிள்ளைகள் விடயத்தில் அதிக நம்பிக்கையுள்ளவர்களாக காணப்படுகின்றனர். எனது பிள்ளை இதை செய்யாது என்ற அதீத நம்பிக்கையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி வழிகேட்டில் ஈடுபடும் நிலை இன்று அதிகரித்துள்ளது. சிறிய சம்பவங்களில் தொடங்கி இன்று உயிரை எடுக்கும் அளவிற்கு மாறிவிடுகின்றது.


பெற்றோர்களைப் பொறுத்தவரை பிள்ளைகளின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் கவனித்தல் வேண்டும். அவர்களின் பணப்பரிமாற்றம், நண்பர்கள்வட்டம், சமூக வலைத்தளப் பாவனை என அனைத்தையும் கூர்ந்து கவனித்து பாதை தவறும் போது உரிய வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

இதே போல் தான் இரண்டாவது பெற்றோர் என போற்றப்படும் ஆசிரியர்களின் பங்கு அளப் பெரியவை. தம்மிடம் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மாணவர்கள் பற்றியும் அவர்களது குடும்பப் பின்னணி பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும். அவர்களுடன் அன்பாகப் பழகி அக்கறையாக செயற்பட்டு தனிமையில் வாழும் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல்களை செய்வதோடு ஏனைய துறை சார்ந்த அதிகாரிகளின் உதவிகளுக்கான சிபாரிசுகளையும் செய்தல் வேண்டும்.

பெற்றோர்களை விட ஆசிரியர்களே மாணவர்களின் பிரச்சினைகளை இலகுவில் அடையாளம் காண இயலுமாய் இருக்கும். எனவே நுனியிலே இவற்றைக் கண்டறிந்து சிறந்த வழிகாட்டல்கள் மூலம் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். இதே போல் தான் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பொறுப்புதாரியாக காணப்படுகின்றனர். அந்த வகையில் குற்றச் செயல்கள் இடம்பெறும் இடங்கள் அது தொடர்பான நபர்கள் சிறுவர்களின் பாதுகாப்பிற்கு இடையூறு விளைவிக்கும் நபர்கள் போன்ற விடயங்களை அடையாளப்படுத்தி சமூகத்தில் உள்ளவர்களை வழிப்படுத்தல் அவசியம்.

இதே போல் சிறுவர்களின் பாதுகாப்பு உரிமை மீறல்கள் என்பன இடம்பெறும் போது உரிய அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்கி ஊர் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு செயற்படுவதால் எதிர்கால சிறுவர்களின் நலனை பாதுகாக்க முடியும்.

எனவே தனி ஒருவராய் இல்லாது அனைவரும் ஒன்று சேர்ந்து எமது இளம் சமூகத்தை பாதுகாப்போம்.




**ஏ.எம். கஸ்பியா வீவி**
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்
பிரதேச செயலகம்
அட்டாளைச்சேனை

# நினைவு நிழல்

பின்னேரத்து வெயிலில்லாத வானம் அதிகாலை நேரம் போல மங்கிய வெளிச்சத்திலிருந்தது. பகல் பெய்த மழைக்கு குளிர்ந்த நிலம் அமைதியாகப் பரவியும் கிடந்தது.

காரணங்களேதும் சொல்லாமல் இப்படி பட்டப்பகலிலும், கும்மிருட்டு திட்டுத்திட்டாய் வானவெளியை அடைத்துக் கிடக்கும் இரவுகளிலும் இந்த "பரட்டச்சி"யின் அடியில் வந்து ஆயாசமாய் குந்தியிருப்பது எத்தனை சுகம்!

"பரட்டச்சி"- பின்வாசல் குருத்து மணற்பரப்பில் பெரும் உருப்படியாய் விரிந்து நிற்கும் வேப்பமரம்.

உம்மம்மா முதிரைப் பலகையில் கட்டித் தந்த ஒத்தாப்பு ஊஞ்சலில் அவவின் மடியிலேயே தலைப்புதைத்து, கதை கேட்ட கிறக்கத்தில் மல்லாக்கப் படுத்தபடி இந்த வேப்பமரத்தைப் பார்க்கையில் பலகாலம் வாரி முடிக்காத பெண்ணொருத்தியின் தலைபோல பரட்டையடித்துப் போயிருக்கும். அதனால் தோன்றியதே அந்தப்பெயர்.

இன்று மடியில் கிடத்தி தலைமயிர் கோத உம்மம்மா இல்லாமற்போய் பலகாலம் ஓடியிருந்தாலும், அந்த ஒத்தாப்பு ஊஞ்சலும், "பரட்டச்சி"யும் இன்னும் அங்கேயே இருந்தன. உம்மம்மாவை தூக்கிக் கொடுத்த இந்த இரண்டு தசாப்தங்களில் அவவின் நினைவுகளொன்றும் எப்பொழுதுமெல்லாம் வந்து போவதில்லை. யதார்த்தம் பிடரி மயிரை பிடித்திழுத்து காலவோட்டத்தின் சுழலில் தள்ளி தீராப்பழியின் மாகம் பெய்யும் வசைத்தூறலின் கனதி தாளாது நடை தளர்ந்து தள்ளாடும் பொழுதுகளில் மட்டும் "பரட்டச்சியின்" செவ்விய தளிர்கள் போல அவ்வப்போது துளிர்விடும் - பின் சுருங்கி உதிரும்.

"பிபிசி" அவ்வா ராத்தா காலையிலேயே இங்கு விஜயம் செய்தது ஆச்சரியத்தைத் தந்திருந்தாலும் அவவின் வாய்க்குக் கிடைத்த அவலை மென்று, முழுங்கத்தான் வந்திருப்பா என்பது என் யூகம்.

"புள்ள...செமிலத்துட பின்வாசல்ல நிண்ட வேப்பமரத்தத் தரிச்சிப் போட்டாகளாமடி... அதுல வைரவன் நிக்கிறயாங்..." என்று ஆரம்பித்தவ ஒரு பிளேண்டிக் கிளாசுடன் கொடுத்த இஞ்சி விசுக்கோத்தைக் கொரித்தவாறே பத்தையும் பலதையும் அலசி விட்டு கிளம்பிப்போனா. அவவின் சில சாதாரண வார்த்தைகள் கூட என்னை ஆழமாகப் பாதித்திருந்ததன் அர்த்தம் பிடிபடவில்லை.

பகல்வேளைக்கு இரண்டு மூன்று சோற்றுப்பருக்கைகளோடு பிரட்டித் தின்ற மீன்கறியின் வாடை கைகளில் இன்னும் ஒட்டியிருந்தது. நேரம் ஆறுமணி கடந்திருந்தது. சண்டமாருதத்திற்கும் மந்தமாருதத்திற்கும் இடைப்பட்ட ஒரு மிதமான காற்றின் சுழலும் மாறுபாடாக ஆர்முடுகலாயும் அமர்முடுகலாயும் பின் சற்று சமனிலையாயும் வீசிக் கொண்டிருந்தது. சில மனிதர்களின் வார்த்தைகள் போல.

அன்பை வேண்டியலைந்து பின் அதுபோன்ற போலியொன்றில் சிக்கி அது திகட்டிப்போன கணம் ஒரு கோசமதங்கொண்ட கொம்பன் யானை போலும் கருக்கொண்ட வக்கிரத்தின் கடலில் சூழ்ந்த திரைகள் வருவதும் போவதுமாய் இருந்தன. பேயாழி எப்போது வேண்டுமானாலும் அடித்துக்கொண்டு போகலாம். "உன்னப்போல கேவலங்கெட்ட நினப்பு இரிக்கிறவள கழட்டி உடாம என்னடி செய்ற?" உள்மனத்தில்

சதா ஜெபிக்கக் கேட்கும் வார்த்தைகளவை. கோதமேதுமறியா வாத்ஸல்யத்தில் கொஞ்சக் கிடைக்காத தாய்முகம் போல ஒருவகை ஏக்கத்துடனே தொடர்ந்த காதலின் முடிவில் பேசக்கேட்ட வார்த்தைகளின் வீச்சம் செவிப்பறைகளுக்குள் குப்பென்றடித்தது.

“நீ தின்னாமக் கிடந்து செத்தாலுங் அவள முடிக்க நான் ஒத்துக்கமாட்டன்...”

எவ்வகையிலும் அன்பைப் பிரசவித்துவிடக் கூடாதென்ற ஒருவகை வக்கிரமும் சிந்தனையின் கற்படுக்கைகளில் தன் காலடியை ஆழப்பதித்து நடந்தது.

பெண்ணென்றும் பாராமல் கேட்ட வசைகளும் காதலென்று அறிந்தும் சேராத நேசமும் மாறி மாறிப் புரிந்த மற்போரில் காதல் நாணத்தில் உதிர்த்த வார்த்தைகளில், அவ்வார்த்தைகளின் மயக்கத்தில், அந்நினைவின் மணத்தில் எல்லாம் மறந்து லயித்து நின்றுவிடும் ஆத்மாவில் பூத்திருந்த ஒரு ரோஜாவில் புழுதி படியத்துவங்கியிருந்தது.

சராசரி ஒருவரின் மேல் ஆசைப்பட எனக்கு அருகதையுண்டா....?
அவிழ்ந்து விழுந்த தலைமுடிக்கொத்தில் பெண்மையை மறைத்து மௌனமாய் வெட்கி நிற்க மட்டுமே முடிகிறது.

காற்றுப்பட்ட இலைகள் சரசரவென ஆடுவதும், பழுத்த இலைகள் கீழே விழுவதுமாக மாறி மாறி நிகழ்ந்து கொண்டேயிருந்தது.

திடீரென்று உம்மம்மா கருவிழிக்குள் நிழலாடத்துவங்கினா.

“மீன்கறியத் திண்டுவோட்டு வேப்பமரத்தடிக்கிப் போப்புடா புள்ள பிலால் வாசத்துக்கு வைரவன் வந்தாலுங்...ஊட்டுக்குத் தலப்புள்ள...”

மெலிதான பெருமூச்சோடு ஒரு புன்னகையும் வெளிப்பட்டது.

இரவு நேரம்...
பரட்டச்சி காற்றுடனான சரசத்தைத் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

“பிலால் வாசத்துக்கு வைரவன் வந்தாலுங்...” உம்மம்மாவின் குரல் மீண்டுவரத் தொடங்கியது.

வேப்பமரங்களின் உச்சாணிக்கொப்பில் வைரவன் வாசஞ்செய்வதாக அவ சொன்ன ஞாபகம்.

“அப்ப....பரட்டச்சிலயுங் வைரவன் நிக்கிமா?” கொவ்வை போல் வெற்றிலைச் சிவப்பிலாகியிருந்த உதடுகளைச் சுழித்துச் சிரித்தவாறே உம்மம்மா சொன்னா...

“இல்ல புள்ள, இப்பயெல்லாம் மனச்சாட்சிய கொண்டுபோட்டு திரியிற ஆக்கள்ற ஊட்டு வேப்பமரத்துலாங் வைரவன் நிக்கிம், பக்குல் கேவும் எல்லாம் அவக அவகட ஈமான் மௌத்தாப் பெயித்துன்றதுக்குரிய அடையாளந்தாங்...”

அண்ணார்ந்து பார்க்க பரட்டச்சியின் உச்சாணிக்கொப்பு தெரிந்தது.

அதில் உம்மம்மா சொன்ன வைரவனுமில்லை, வெள்ளைப்புடவையுமில்லை.

வெள்ளி நிலவு மட்டும் எரித்துக் கொண்டிருந்தது.

உள்ளிருந்து மனசாட்சி பேச ஆரம்பித்திருந்தது.
“அப்ப அவகட ஊட்டயும் வைரவன் நிக்கிமா? அண்ணாந்து பாத்தா வெள்ளப்புடவ தெரியுமா? பக்குல் கேவித்திரியுமா?”
காலையில் அவ்வா ராத்தாவின் கதை கேட்டதில் இதற்கெல்லாம் பதில் கிடைத்திருந்தது.

“புள்ள...செமிலத்துட பின்வாசல்ல நிண்ட வேப்பமரத்தத் தரிச்சிப் போட்டாகளாமடி....”

**ஆக்கம்:**
**அஷ்ரிபா ஆரிப்**

# என் எல்லைகள் என் மரியாதை

ஒரு பெண்ணாக பிறந்த போதிலிருந்தே, நானும் என் எல்லைகளும் ஒரே பாதையில் பயணித்து வந்துள்ளோம். என் வாழ்வில் உள்ள ஆண்களாக என் தந்தை, என் சகோதரர்கள், என் தந்தையின் சகோதரர்கள் (சித்தப்பா), என் தாயின் சகோதரர்கள் (தாய் மாமா), என் குடும்ப ஆண் பிள்ளைகள், திருமணத்துக்கு பின் என் கணவன், என் ஆண் பிள்ளைகள். இவர்களைத் தவிர, என் வாழ்க்கையில் யாரேனும் ஆணுடன் ஒரு தனிப்பட்ட உறவு வளர்ப்பது எனக்கு விருப்பமில்லாத ஒன்று. அது என் நம்பிக்கையின், என் வாழ்க்கைத் தத்துவத்தின் ஒரு பகுதி.

நாளுக்கு நாள், ஒரு பெண் எதிர்கொள்ளும் சவால்கள் பலவாக இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் எங்கிருந்தோ ஒருவன் வந்து "நண்பன்" எனத் தோன்ற, பின்னர் அதற்குப் பின்னாலுள்ள நோக்குகள் வேறாகவே இருப்பதை உணர நேரிடுகிறது.

என் மனதில் ஒரு கேள்வி பிறக்கிறது: ஏன் சில ஆண்களுக்கு, ஒரு பெண்ணிடம் தந்தை அல்லது சகோதர பாசத்துடன் நடந்து கொள்ள முடியவில்லை?

முடியாமல் இல்லை. ஆண்களில் பலர் உளமாரும், எல்லைகளை மதிக்கும் பண்புடனும் இருப்பார்கள். ஆனால் சிலர், பெண்கள் கூறும் "இல்லை" என்பதையே ஒரு அழைப்பு என எண்ணுகிறார்கள். அவர்கள் பாசத்தையும் நட்பையும் கூட ஒரு சந்தர்ப்பமாக மாற்ற முயற்சிக்கிறார்கள். இது அவர்களின் மனப்பான்மையின் தவறான வெளிப்பாடாகவே பார்க்கப்பட வேண்டும்.

நான் என் எல்லைகளை நிர்ணயித்தவள், அதை வெளிப்படுத்தத் தயங்காதவள், என் மரியாதைக்கு ஏற்ப நடக்க விரும்புபவள், என் உள்ளத்தை ஒரு மனிதனிடம் திறப்பதற்கு முன், அவர் அதற்கு தகுதியானவரா என்பதை நான் அறிந்து கொள்வேன்.



மரியாதையை எதிர்பார்ப்பது தவறு அல்ல. தன் எல்லைகளை நிலைநாட்டுவதும் தவறு அல்ல. ஒரு ஆண், என் விருப்பத்திற்குப் புறம்பாக நடக்கிறான் என்றால், அதில் நான் தவறவில்லை. அவன் தான் தவறுகின்றான்.


இன்று அந்த ஆணிடம் இருந்து விலகுவது எனக்குக் கஷ்டமாய் இருந்தாலும், அது எனது மன அமைதிக்காக, மரியாதைக்காக மிக முக்கியமானது என ஒவ்வொரு பெண்ணும் நினைக்க வேண்டும். ஒரு பெண் தனது நிலைப்பாட்டில் உறுதியுடன் நிற்பது தான் உண்மையான வலிமை. நான் அந்த வலிமையைச் சொரூபமாக்கிக் கொள்கிறேன்.

ஒரு பெண்ணின் எல்லைகள், அவளது உடலுக்கான பாதுகாப்பு மட்டுமல்ல. அவை அவளது மனதின் காவல் கோட்டையும் மரியாதையின் நிலையான நிரூபணமும் ஆகும். அவற்றை மீறுவது எவராலும் செய்யக் கூடாது. மரியாதை என்பது பெறவேண்டிய ஒன்று அல்ல, அது எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது.

இப்படிக்கு நான்,
"பெண்"

ஆக்கம்:
றுக்ஷானா யஹியா
துணிந்தெழு ஆசிரியர் குழு

# தாயானவள் என் காதலி



எனக்கென்று என் காதலி
சொல்ல வார்த்தை இல்லை
அவள் பெருமை
பேசும் வார்த்தைகள் அருமை
எனது காதுகளுக்கு அதுவே இனிமை
என் வாழ்வை மாற்றியது
அவள் திறமை

தாயின் செல்ல பிள்ளை நான்
அவளும் எனது தாயின்
பாச மகள் தான்
என் வாழ்வில் பிரச்சினை ஏற்பட்டால்
ஆறுதலும் தீர்வும் அவளே
எனது அடுத்த தாயும் அவளே

அவளை பார்த்துக்
கொள்வேன் கண்ணாக
அவளது முகத்தை
வரைவேன் ஓவியமாக

நான் அவள் மேல் காதலில்
வீழ்ந்த போது எனது அடுத்த
என் உயிரை காணவில்லை
அவளை ஒரு போதும் மறக்கவில்லை

**சிவகஜன்**
தியத்தலாவை

# தூரமான உறவுகள்

பிரிவுகளை ஆறுதல் படுத்த
எளிதில் முடிவதில்லை

எங்கோ பிறந்து
எவ்விடமோ சார்ந்து
அங்கோர் நட்பில் சுழன்று
பிழைப்பின் வழி தேடி
தொலைதூரம் செல்ல
சில மணி நேரங்களில்
மட்டுமே தொடரும்
ரயில் நேயமாக
முடிந்து போய் விடுகிறது
சுற்றங்களின் நேசங்கள்



**சுமி முருகன்**
வில்லியனூர்
புதுச்சேரி மாநிலம்



# அறுவை பிரசவம்

சேனையூர்
சியாத் அஸ்வா

அறுவை பிரசவத்தில் அன்பில்லையாம்
என்கின்றனர் அனுபவமில்லாதவர்கள்
முதுகெலும்பான முள்ளந்தண்டில் போடும்
முதல் ஊசியிலேயே முடிந்து விடுகிறது
முக்கால்வாசி உயிர்

அரைப்பிணமானதும் தான்
ஆரம்பமாகிறது இனிய வாழ்க்கை
ருசிக்கவும் முடியாமல் ரசிக்கவும்
முடியாமல் அதன் ஓட்டத்திலே காலம்
ஓடுகின்றது கண்ணீராய்

வயது இரண்டு தாண்டியதும் குனிந்து
நிமிர்கையிலே சுள் என்கும் முள்ளந்தண்டு.

வயது ஐந்து தாண்டியதும் மடியில்
தாங்க நினைக்கையிலே அடி வயிறு
அலறிவிடும்

அன்பு அது இல்லாமலில்லை
ஆரோக்கியத் தடையே அதன்
முட்டுக்கட்டை அதற்குள்ளே அடுத்த
பிள்ளை இரண்டு வயதில் விளையாடும்

திகட்டாத செல்வமது பிள்ளைச் செல்வம்
என்பதினால் துணிந்தே மீண்டும் மீண்டும்
அறுவைக்கு செல்லுகிறாள் ஆறாத
வலிகளோடு



# நிஜங்களின் மாறுவேடம் நினைவுகளோ?

எம்.யூ. ஹுருல் நுஹா

கடந்து வந்த பாதையில்
சுவடுகளோடு நடந்து வந்த நம் காலடிச்
சத்தம் இப்போது நிசப்தமாக தொலைந்துவிட
அவை திரும்பிப் பார்க்கும் தருணங்களில்
தொடர முடியாத தொலைவுகளாய்
மாறுகின்றன

நிஜங்கள் நிலையற்றவையாய் மங்கிக்
கொண்டிருக்க நிகழ்வுகள் மட்டும்
மாறுவேடம் போட்டுத் திரும்புகின்றன
மனதின் ஓரத்தில் ஒளிந்திருக்கும்
மறக்க முடியாத நினைவுகளாக

நீ இருந்த, நானிருந்த அந்த நாட்கள் மட்டும்
இன்னும் எனக்குள் உயிரோட காலத்தின்
வேகத்திலும் காலாவதியாகாத நினைவுகளாக

# ஆளுமை அறிமுகம்

## இலங்கை எழுத்தணிக் கலையில் சிறந்து விளங்கும்

# அமீர் ஃபைஸல்



**மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொள்ளுப்பிட்டியினைப் பிறப்பிடமாகக் கொண்ட அமீர் ஃபைஸல் அவர்கள் தற்போது தெஹிவளையில் வசித்து வருகிறார். இவர் அப்துல் ஹமீத் நூரி அல்ஆலிம் மற்றும் ஸகரிய்யா உம்மா ஆகியோருக்கு பிறந்த புதல்வராவார். இவருடன் ஏழு உடன்பிறப்புக்கள் உள்ளனர்.**

**இவர் அரபு எழுத்தணிக் கலையில் சிறந்து விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. எழுத்தணிக் கலையானது மக்கள் மத்தியில் தனி இடத்தை பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படும் அமீர் ஃபைஸல் அவர்களுடனான நேர்காணல் இதோ..**

### 1. நீங்கள் கற்ற கற்கைகள் பற்றி?

1976ஆம் ஆண்டில் அல் ஹிதாயா மஹா வித்யாலயத்தில் கற்று N.C.G.E. தேர்ச்சி பெற்றுள்ளேன். 1979-1983 வரையிலான காலப்பகுதியில் இந்தியாவின் கயல்பட்டினத்தில் உள்ள ஸவியத்துல் பாஸிய்யத்துஷ் ஷாதுலிய்யா கல்வி நிறுவனத்தில் மார்க்கக் கல்வியினை கற்றேன். அத்துடன் அச்சுத் தொழில், கிராபிக் டிசைன், வணிக நோக்கிலான அரபு எழுத்தணிக் கலை போன்றவற்றில் சிறப்பு பயிற்சி பெற்றுள்ளேன். அதாவது, இலங்கை அச்சு நிறுவனம் (1996-1998), கெண்ட் டிஜிட்டல் அறிவியல் அகாடமி (2001), மற்றும் Al Wahby Advertising (சவுதி அரேபியா 1991-1993) ஆகிய நிறுவனங்களிலும் கல்வி கற்றுள்ளேன்.

### 2. அரபு எழுத்தணிக் கலையில் உங்களை சாதிக்கத் தூண்டிய காரணம் எது?

நான் ஆறாம் வயதிலிருந்தே இக்கலையின் மீது அதீத ஆர்வம் கொண்டிருந்தேன். எனது தந்தையுடன் இணைந்து கிதாப் எழுதுவதில், அதனை தட்டச்சு செய்வதில் உதவியாக இருந்தேன்.

இளமைக் காலத்தில் இந்தியாவில் காயல்பட்டனத்தில் இஸ்லாமிய கற்கையில் ஈடுபட்டிருந்த போது துஹ்.்.பா, கத்ருன் நதா, அல்.்.பியாத் இப்னு மாலிக் போன்ற பாரம்பரிய அரபு இலக்கண நூல்களை கைப்பிரதியாக எழுதினேன். இதனூடாக எனக்கு எழுத்தணிக் கலையில் ஆர்வம் அதிகமாகி விட்டது.


### 3. அரபு எழுத்தணிக் கலையில் நீங்கள் பெற்ற வெற்றிகள் எவை?

இந்தியாவில் கற்கும் போது ஆரம்பத்தில் நூல்களை கைப்பிரதியாக எழுதியது எனது துறைக்கு கிடைத்த ஆரம்ப படிக்கல்லாகும். இலங்கையில் 2015 மார்ச் மாதத்தில் கொழும்பு கலை பல்கலைக்கழகத்தின் J.D.A. Perera Gallery யில் எனது முதல் தனிக் கண்காட்சி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, 2023 மே மாதத்தில் அதே காட்சியகத்தில் எனது இரண்டாவது தனிக் கண்காட்சி “Reflection of Rejections”



(நிராகரிப்புகளின் பிரதிபலிப்பு) நடைபெற்றது. மேலும், சர்வதேச ரீதியாகவும் சில வெற்றிகள் எனக்கு கிடைத்தன. 2022இல் இந்தியாவின் குஜராத்தின் சூரத்தில் நடைபெற்ற Callifest India இல் பங்கேற்றேன்.




2023 ஒக்டோபர் மாதத்தில் இந்தியாவின் கேரளாவில் கொச்சினில் சர்வதேச எழுத்தணிக்கலை நிகழ்வில் (ICFK) பங்கேற்றேன். 2023 இல் இந்தியாவின் மகாராஷ்டிராவில் நடைபெற்ற "Aksharyadnya" நிகழ்ச்சியில் பங்கேற்று நேரடி செயல் விளக்கம் வழங்கினேன். 2024இல் ஈரான் நாட்டில் தெஹ்ரானில் நடைபெற்ற 31வது சர்வதேச குர்ஆன் கண்காட்சி பங்கேற்றுள்ளேன்.

### 4. உங்களது தற்போதைய செயற்பாடுகள் எவை?

தெஹிவளையில் உள்ள An Nooriya அகாடமியின் நிறுவனராக செயல்பட்டு வருகின்றேன். பல்வேறு பகுதிகளில் எழுத்தணிக்கலை கருத்தரங்கு மற்றும் பயிற்சி பட்டறைகள் நடத்தி வருகின்றேன். Asian Academy of Finance இல் எழுத்துக் கலை வருகைதரு விரிவுரையாளராக பணியாற்றி வருகிறேன். பேருவளையில்



உள்ள Noon institute மற்றும் காலியில் உள்ள Al Madhrasathul Musthafaviyya ஆகிய இடங்களிலும் அரபு எழுத்துக் கலை பாடநெறிகளை நடத்தி வருகிறேன். நான் எழுத்தணிக்கலை சார்பாக பேருவளை நிறுவனத்தில் கிராபிக் டிசைனர் மற்றும் அச்சு பதிப்பு ஒருங்கிணைப்பாளராக பணிபுரிவதோடு, இங்கு வெளியிடப்படும் நூல்கள் மற்றும் வடிவமைப்பினை மேற்பார்வை செய்கிறேன்.

### 5. உங்கள் துறையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் அதனைத் தீர்த்துக் கொண்ட விதம் பற்றி கூறுங்களேன்?

ஆரம்ப காலத்தில் இத்துறையில் பயணிப்பதற்கு சரியான பொருட்கள் இலங்கையில் கிடைக்காததன் காரணமாக பலகைத் துண்டுகளைப் பயன்படுத்தி எழுதிக் கொண்டு வந்தேன். பொருட்கள் பாரிய விலையுயர்ந்ததாக காணப்பட்டதால் அதனைப் பெற்றுக் கொள்வதே பெரிய சவாலாக இருந்தது. அதற்கு மாற்றீடாக பொருத்தமான வேறு பொருட்களைப் பயன்படுத்தினேன்.

### 6. உங்கள் அரபு எழுத்தணிக் கலையினை மேம்படுத்த செய்யவிருக்கும் திட்டங்கள் எவை?

இலங்கையில் An Nooriya அகாடமி மூலம் எமது அரபிக் எழுத்தணி திட்டத்தினை மேம்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன். புதிய, நவீன அரபு எழுத்தணி முறையை அறிமுகப்படுத்த வேண்டும். அதற்காக நான் ஈரான், இந்தியா போன்ற வெளிநாடுகளிற்குச் சென்று இது பற்றிய புதிய விடயங்களை கற்றுக் கொண்டிருக்கிறேன். அதன் மூலம் மேம்படுத்திக் கொண்டு வருகின்றேன். மேலும் ஒக்டோபர் மாதத்தில் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் எழுத்தணிக் கலை கண்காட்சியொன்று J.D.A.Perera gallery இல் நடைபெறவுள்ளது.

### 7. உங்கள் இலக்கு பற்றி கூறலாமே?

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் அரபு எழுத்தணிக்கான ஒரு சிறந்த இடத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல் எமது An Nooriya அகாடமி அதில் தலைசிறந்து விளங்க வேண்டும்.



### 8. நீங்கள் இக்கலைத் தொடர்பாக சமூகத்துக்கு கூற நினைக்கும் விடயங்களை பகிர்ந்துக் கொள்ளலாமே?

அரபு எழுத்தணிக் கலையானது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கலையாகும். இது பழங்காலத்து கலையாக திகழ்கிறது. எனவே அனைவரும் அதீத ஆர்வம் கொண்டு இதனைக் கற்றுக் கொள்ள வேண்டும். இஸ்லாமிய கலைகளுக்கு மிக முக்கியமான அம்சமாகும். ஆகவே இதனை கைவிடாது அனைவரும் கவனமெடுத்து முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும்.



### 9. ஸ்கை தமிழ் ஊடகம் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றி எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?

சகோதரர் ஹுஸைப் முஸம்மில் அவர்கள் மூலமாகவே எனக்கு ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றிய அறிமுகம் கிடைத்தது. நான் ஸ்கை தமிழ் செய்திகளை பார்வையிட்டு வருகிறேன். அதேபோல் துணிந்தெழு சஞ்சிகையானது பெண்களுக்கான ஒரு சாதனைத் தளமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இனிவரும் காலங்களிலும் மென்மேலும் வளர்ச்சியடைய மனதார வாழ்த்துகிறேன்.



செவ்வி கண்டவர்:
ஹப்ஸா பஹுமீர்
உதவி முகாமையாளர்
துணிந்தெழு சஞ்சிகை

# பேசும் பேனாக்கள்

## இன்னும் மக்கள் மயப்படும் துணிந்தெழு

ஆக்க இலக்கியச் செயற்பாடுகளுடன் கூடிய துணிந்தெழு சஞ்சிகையின் பயணம் என்பது மிக நீண்ட பரந்து விரிந்த இலக்கிய உலகின் கரை காண முடியாத நகர்வாகவே இருக்கிறது.

"இலக்கிய நகர்வு" (Literary Movement) என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் தோன்றிய, சிந்தனை, கலை, அரசியல், சமூகச் சூழ்நிலை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு உருவான இலக்கியப் போக்குகளைச் சுட்டுகிறது.

மேலும் இலக்கிய நகர்வு என்பது ஒரே நேரத்தில் சமூக, அரசியல், கலாச்சார மாற்றங்களை வெளிப்படுத்தும் ஒரு இலக்கியத் திசை அது தனி எழுத்தாளரின் சிந்தனை அல்ல, குழுவான சிந்தனைக்கான வெளிப்பாடு.

நகர்வுகள் தோன்றுவதால் பழைய பாரம்பரியங்கள் சவால் செய்யப்படுகின்றன. புதிய சிந்தனைகள் சமூகத்தில் வேரூன்றுகின்றன.

"இலக்கியம் தனி எழுத்தாளரின் சிந்தனை அல்ல, அது சமுதாயத்தின் தேவை, உணர்ச்சி, போராட்டங்களின் வெளிப்பாடாகும்" என்கிறார் க. நா. சுப்பிரமணியம் அவர்கள்.

இப்படி இலக்கிய கருத்தாடல்கள் உள்ள போது துணிந்தெழு சஞ்சிகையின் தோற்றமும் வெளிப்பாடும் இலக்கிய உலகில் பெருமளவிலான மாற்றப் பாதையை உருவாக்கி கால ஓட்டத்தில் முழுக்க முழுக்க டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட ஒரு அணுகுமுறையை உருவாக்க எடுக்கும் முயற்சியின் எத்தனிப்பாக இருக்கிறது.

காலம் நான்காண்டை கடந்து செல்லும் போது எடுத்துக் கொண்ட முயற்சியில் எந்த விதமான பின்னடைவுகளும் இல்லாமல் வெற்றி நடை போடுவது ஒரு சாதனையாக இருந்தாலும் கூட அதன் தீட்சையை அடைந்து கொள்வதில் காட்டுகின்ற முன் மாதிரியும் எடுத்துக் கொள்கின்ற பிரயோகத்தனமும் இன்னும் காத்திரமானதாகவே அமைகிறது.

இதற்கு சான்றாக பல்வேறு நேர்காணல்கள், ஒளி, ஒலி வடிவ காட்சிகள், கட்டுரை, கவிதை போட்டிகள், கலை இலக்கியப் போட்டிகள், புத்தக வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடுகள் என்பன சான்றுக் கூறுகளாக இருப்பது இன்னும் வலுக்கட்டுகின்ற செயற்பாடாக கருத முடிகிறது.

இவ்வரிசையில் குறித்த எமது சஞ்சிகை பல்வேறு விதமான ஆளுமைகளின் விதவிதமான படைப்புகளை பிரசுரித்தாலும் கூட பேசும் பேனாக்கள் எனும் இப்

பகுதியில் பல்வேறு ஆளுமைகளும் அவர்களுடைய நூல்களும் அறிமுகம் செய்யப்படுகின்றன. நூல் விமர்சனப் பகுதியின் ஊடாக பல்வேறு நூல்கள் பற்றிய விமர்சனங்களும் வாசகர்களின் கருத்துகளும் இங்கு பகிரப்படுகின்றன.

“பேசும் பேனாக்கள்” என்ற பகுதியில் வாசகர்களுடன் சிந்தனைகளைப் பகிர்ந்து, புத்தக உலகின் பல வண்ணங்களைச் சந்தித்து வருகிறோம். ஒவ்வொரு நூலும்
ஒரு புதிய பார்வையும், புதிய அனுபவமும், நம் மனதை மாற்றும் ஒரு சிறிய பயணமாகிறது.

சென்ற மாதம் அதற்கு முந்திய மாதங்களில் அறிமுகப்படுத்திய நூல்கள் வாசகர்களை பெரிதும் கவர்ந்ததன் விளைவாகவும் அறிமுகங்கள் மிகப் பிரயோசனமாக இருந்ததன் நிமித்தம் பல்வேறு நூல்கள் வந்து கிடைக்கப் பெற்றிருக்கின்றன. நூல் வெளியீடுகள் பற்றிய தகவல்களும் வந்து சேர்கின்றன. நூல்கள் பற்றிய விமர்சன பார்வைகள் பல்வேறு செவ்விகளூடாக எம்மை வந்து சேர்கின்றன. அவைகள் அனைத்தையும் கால தாமதங்கள் ஆனாலும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளப்படும் என்பதே நிஜம்.


இம்மாதம் இந்தப் பக்கங்களுக்காக நாம் தேர்ந்தெடுத்த கவிதை நூல்களும் அவற்றின் சிந்தனையும் உங்களைத் தூண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. வாசிப்பு ஒரு பழக்கமல்ல அது ஒரு அனுபவம் அந்த அனுபவத்தை உங்களுடன் பகிர்வதே “பேசும் பேனாக்கள்” தொடரின் நோக்கம்.

இரு நூல்களை உங்களுக்காக பரிந்துரை செய்கிறேன். இரு நூல்களும் இளம் எழுத்தாளர்கள் உடைய படைப்புகள். இவர்கள் இருவருக்குமான ஒற்றுமை என்பது இருவரும் கிழக்கு மாகாணத்தை உடையவர்கள். இதில் நான் சொல்ல வருகின்ற முதலாமவர் தனது ஆறாவது நூலாக வெளியீடு செய்து வைத்திருக்கும் கவிதை பிரதி பட்டியல். இரண்டாவதாக நான் அறிமுகம் செய்ய நினைப்பவர் அவரது கன்னி நூலாக இந்நூலை பிரசவித்திருக்கிறார். இரு நூல்கள் பற்றிய ரத்தினச் சுருக்கமான கண்ணோட்டம் உங்கள் பார்வைக்காக.....

உங்களுடைய நூல்கள் பற்றிய சிறு குறிப்பு மற்றும் அனுபவப் பகிர்வுகளை எங்களோடு பகிர்ந்து கொள்ள நூல்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.மேலும், உங்கள் பிரதேசங்களில் நடைபெறுகின்ற அல்லது உங்களுடைய நூல் வெளியீடு விவரங்கள் பற்றிய தகவல்களையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். குறித்த பகுதியில் அவைகளை பிரசுரம் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**

துணிந்தெழு சஞ்சிகை
பேசும் பேனாக்கள் பகுதி
எம்.ஜே.ஜவ்சன் அஹமட்
148,வீசி வீதி பெரிய நீலாவணை 02
மருதமுனை.
0760200387.




நூல் :- பிழையழகு
நூலாசிரியர் :- மலீஸ் அமீன்
வகை :- கவிதை
பக்கங்கள் :- 72
வெளியீடு :- அமீன் BA பௌண்டேசன், மருதமுனை
விலை :- 700/= ரூபாய்
தொ. இல :- 0772788950

எழுத்தாளர் கவிஞர் மலீஸ் அமீன் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியீடு செய்த கவிதைப் பிரிதி பிழையழகு, குறித்த இக்கவிதை பிரதி நூலாசிரியர் உடைய ஆறாவது நூல் என்பது அகம் மகிழ்ந்து குறிப்பிட்டு சொல்லும் விடயமாகும்.

மருதம், நெய்தல் இரண்டோடும் பின்னிப் பிணைந்த கடல் அலைகளின் ஓசையும் கைத்தறி ஓசையும் ஒன்றரக் கலந்த எழில் கொஞ்சும் மருதமுனை கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு பிறந்தவர். இவருடைய தந்தை மருதமுனை கிராமத்தின் முதல் பட்டதாரி எனும் பெயருக்கு சொந்தக்காரராக இருந்தவர்.

குறித்த இந்த நூலை நூலாசிரியர் அவரது தந்தைக்கு சமர்ப்பணம் செய்திருக்கின்ற இவ்வேளையில், இந்த நூல் பல்வேறு தலைப்பிலான கவிதைகளைக் கொண்டதாக காணப்படுகிறது. இந்நூலை படிக்கின்ற போது காதல், ஏக்கம், மாற்றம், மதம், அழகு, ஓசை, எதிர்பார்ப்பு போன்ற பல்வேறு உணர்வுகள் உள்ளவையாக காணப்படுகிறன.

இலகுவான மொழி நயத்தோடு அழகிய சொற்கோர்வைகளை பயன்படுத்தி பல்வேறு இலக்கணச் சிறப்புகளோடு, இக்கவிதைகளை நூல் ஆசிரியர் எழுதியிருப்பது வாசகனாக நூலை

படிக்கின்ற போது புரிந்து கொள்ள முடிகிறது.

ஊனம் அறியா காதல் எனும் தலைப்பில் நூலாசிரியர்

“என் பிள்ளைகள் கூட இப்பொழுது எல்லாம் தனியாக விளையாடக் கற்றுக் கொண்டார்கள் ஆனால் என் கணவனோ இன்னும் என் கரம் பிடித்து நடக்கத்தான் ஆசைப்படுகிறான்” என்று எழுதி இருக்கிறார்.

இவ்வரி அழகாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் இருக்கிறது. அது ஒரு சிறிய சிந்தனை/கவிதை வாக்கியம் போலவே தோன்றுகிறது. குழந்தைகள் வளர்ந்து தன்னம்பிக்கையோடு தங்களாகி விடுகிறார்கள், ஆனால் வாழ்க்கைத் துணைவரின் பாசமும் உறுதியும் இன்னும் அதேபோல நீடிக்கிறது என்ற உணர்வை இது வெளிப்படுத்துகிறது.

இப்படி இது போன்ற இன்னும் பல சுவாரசியமான கவிதைகள் நிறைந்த தொகுப்பாக இத்தொகுப்பு வெளிவந்திருக்கிறது. இது தவிர இன்னும் அவர் வெளியீடு செய்த இதர பிரதிகளும் அவர் கைவசம் இருக்கும் என நம்புகிறேன். நீங்களும் நூல்களை பெற்று உங்கள் வாசிப்பு பணியை தொடரலாம்.

இவரின் இலக்கியச் செயற்பாடுகளை கருத்திற்கொண்ட துணிந்தெழு சஞ்சிகை இவரை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறது.




02.
நூல் :- பொற்கரம்
நூலாசிரியர் :- முஜிப் ரஹ்மான் ஸஞ்ஸீதா
வகை :- கவிதை
பக்கங்கள் :-88
கவிதைகள் :- 60
ஆண்டு :- 2024
விலை :- 500

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினுடைய மாணவியாக கல்வி பயணத்தை தொடர்கின்ற போதே தன் எழுத்துக்கள் ஒரு கனதியான படைப்பாக வெளிவர வேண்டும் என்று எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக இந்த நூலை வெளியீடு செய்து வைக்கிறார் ஸஞ்ஸீதா.

அணிந்துரை, வாழ்த்துரை ஊடாகவே

கட்டாயம் இவருடைய நூலை படிக்க வேண்டும் என்ற மனநிலை ஏற்படுகிறது. அங்கு அவருடைய கவிதைகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்ற முறை என்பது மிக வித்தியாசமான விளைவுகளை உருவாக்குகிறது.

உள்ளே கவிதைகள் பாடசாலை கால நினைவுகளையும் தோழிகளின் நட்புக்களையும் பெண்ணின் அவலங்களையும் சீதனக்கொடுமைகளையும் கணவன் மனைவிக்கான உறவையும் உரிமை, சுதந்திரம், இழந்து விட்ட நாட்கள் மற்றும் உறவுகளின் முக்கியத்துவம் போன்ற விடயங்களை உள்ளடக்கியவையாக காணப்படுகிறது.

உரை நடை, வசன நடைக் கவிதைகளாக எழுதப்பட்டிருக்கும் முழுக் கவிதைகளிலும் பாவிக்கப்பட்டிருக்கும் சொற்பிரயோகங்கள் மற்றும் மொழியாடல்கள் என்பன இலகுவாக ஒரு வாசகனை கவரும் விதத்திலும் இலகுவாக அவனது வாசிப்புப் பயணத்தினை துரிதப்படுத்துகின்ற போக்கினையும் கொண்டுள்ளதாக இனங்காண முடிகிறது.

நூலாசிரியரின் கன்னி முயற்சியாக வெளி வந்திருக்கின்ற இப்பிரதின் சொற்களின் முதிர்ச்சியையும் கனதியையும் பார்க்கின்ற போது மொழியை நன்கு தேர்ந்த மொழியின் மீது மிகக் கூடுதல் ஐக்கியம் கொண்ட ஒருவராக நூலாசிரியரை இனங்காண முடிகிறது. அது மட்டுமல்லாமல் வாசிப்பு என்பது நூலாசிரியருக்கு கைவந்த கலையாகவும் இருப்பது இப்பிரதி ஊடாக புலப்படுகிறது.

இந்நூலில் ஓரிடத்தில் சுதந்திரம் எனும் கவிதை தொடரில்

“ஆடவனோ மங்கையோ என்ற பேதமில்லை சுதந்திரம் என்ற ஒற்றை சொல்லுக்கு ஆடை அலங்காரத்தில் இருவருக்கும் சுதந்திரம் தான் அதற்காய் அங்கங்களை அம்பலப்படுத்த வேண்டும் என்ற வேட்கையோடு சுதந்திரம் தேடலாகாது.”

என ஆடைச் சுதந்திரம் கேட்கும் பெண் தரப்பினருக்கு மிக ஆழமான வரிகளின் ஊடாக பாடம் புகட்டுகிறார்.

அத்துடன், இப்படி இன்னும் பல நீதிக் கருத்துக்களையும் சமூக விழுமிய கோட்பாடுகளையும் பின்னிப்பிணைந்த சொற்களோடு உவமானம், உவமேயங்கள் அதிகம் கையாண்டு வெளிப்படுத்துகிறார்.

வாசகர்கள் நீங்களும் வாங்கி படித்து உங்களின் வாசிப்பு அனுபவங்களை இன்னும் மெருகூட்டிக் கொள்ள பொற்கரங்கள் நூலை பரிந்துரை செய்கிறேன்.



ஆக்கம் :-
எம்.ஜே.ஜவ்சன் அஹமட்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# நூல் விமர்சனம்

## நீலாவணை இந்திரா எழுதிய "ஆண்குறிகள் அழுக்கானவை" என்ற சிறுகதையின் விமர்சனம்



பெருநாடுகளின் வலுக்குகளுடன் ஒப்பிடுகையில் சிற்றூரிலும் சிறியது எமது நாடு. அதில் இலங்கை பூராவும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் தமிழ்பேசும் சமூகங்கள். அதிலும் உலகெங்கும் ஆங்காங்கே பரந்துவாழும் தமிழர்களை நுணுக்குக்காட்டியின் கண்ணாடிகளால் தேட வேண்டிய நிலை. இருந்தபோதும் நாற்திசைகளிலிருந்தும் உலகளாவிய ரீதியில் எமது குரல் ஓங்காரமாக ஒலிக்கிறது. அதுவும் இனிய தமிழில் ஒலிக்கிறது. கதைகளாக, கவிதைகளாக, நாடகமாக, கூத்தாக, ஒலிப்பேழைகளாக, ஒளிச்சித்திரங்களாக சிறகடித்து வலம் வருகின்றன.

இதில் நாட்டில் வாழ்பவர்கள் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் அவர்களின் வாழ்க்கைப் பின்னணி கலாச்சாரப் பிறழ்வுகள் என ஒரு சிக்கலான கட்டமைப்பில் வாழும் நம்மினம் பேசக்கூடிய விடயங்கள் பேசக்கூடாத விடயங்களெனத் தொன்றுதொட்டு வகுத்தும் பகுத்தும் வைத்திருக்கும் விடயங்கள் இன்றும் பேசப்படாமல் இருப்பதும் அதனால் வரக்கூடிய விளைவுகளையும் பற்றிய சிந்தனைகள் வளர்வதும் மலர்வதும் அழகுதான். இன்னொரு விதமாகக் கூறப்போனால் நமது சமூகத்தில் பேசப்படாது சில விடயங்கள் மறைத்து வைக்கப்படுவதனால் தான் சில சமூகப் பின்னடைவுகளும் சமூகச் சீரழிவுகளும் அதிகரித்துச் செல்லக் காரணமாக இருக்குமோ என்றுகூட எண்ணத் தோன்றும்.

பேசப்படாது என்று இப்பொழுதும் தவிர்த்து வைக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் சங்க இலக்கியங்களில் அதிகமாகப் பேசப்பட்ட விடயங்கள்தான். இந்தக் கதையில் என்னைக் கவர்ந்த முதல் விடயம் என்னவென்றால் இலங்கைவாழ் இளைய தலைமுறை எழுத்தாளர் ஒருவர் துணிந்து பலர் பேசத்துணியாத விடயங்கள் பற்றிப் பேசியதுதான்.

இந்த கதை, சமூக ஏற்றத்தாழ்வுகளையும், பின்தங்கிய மக்களின் (முக்கியமாகப் பெண்களின்) அவல நிலையையும் வெளிப்படையாக பேசுகிறது. எளிமையான நடையில் கதை எழுதியுள்ளார், இதனால் வாசகர்கள் எளிதில் கதையுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. சில இடங்களில், கதையில் வரும் கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் நகைச்சுவையை ஏற்படுத்துகின்றன. இது கதையை சுவாரசியமாக்குகிறது.

இந்த கதையில், கதை சொல்லியின் கூற்றுகள், கதாபாத்திரங்களின் மனவோட்டங்கள் போன்றவற்றுடன்

மட்டுமல்லாமல் அவர்கள் செய்யும் செயல்களால் அவர்களின் வாழ்க்கை நிலை வெளிப்படுகிறது. மொழியை வசப்படுத்தி கருத்தை மறைபொருளாக்கி, படைப்பை செதுக்கித் தரும் ஆற்றலை இந்த எழுத்தாளர் தன்வசப்படுத்தியிருக்கிறார் என்று கூறலாம். "கோதுமை ரொட்டியென நிலத்தை சூடேற்றிக் கொண்டிருக்கும் சூரிய வெப்பம் தகிக்கின்ற பட்டப் பகலில்.. நிலத்தில் விழுந்த பனம்பழம் போன்ற தித்திப்பான முகத்தையுடைய....." போன்ற புதுமையான பொருத்தமான படிமங்களைப் ஆங்காங்கே பாவிப்பதன் மூலம் கதையை மேலும் மெருகூட்டியுள்ளார்.

சுயஇன்பம் என்பது இயல்பான பாலியல் செயல்பாடு தான், இதிலுள்ள நன்மை, தீமைகள் பற்றி பல நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அளவுடன் சுயஇன்பம் பெறுபவர்கள் அதிகம் நன்மையையே அடைகின்றனர்.

ஆனால் இது தவறானதென சில மதக்கொள்கைகள் கூறுகின்றன. இங்கே தன்னைப் புனிதனாக வெளி உலகில் நிலைநிறுத்தும் ஒரு பாதிரியார் சுயஇன்பத்தில் ஈடுபட்ட பால்ய வயதுப்பையன் சுள்ளானுக்கு தண்டனை கொடுப்பதாக ஆரம்பிக்கும் கதையின் இரண்டாவது அத்தியாயம் அவனின் தாய் மரியத்தின் வாழ்வையும் அதன் பின்னணியையும் விபரித்துச் செல்கிறது.

மரியம் இறந்துபோன கணவனுடன் வாழ்ந்த காலங்களை நினைத்து ஏங்கும் அதேவேளை தன் கஷ்டத்தின் நிமித்தம் உடலை விற்று சீவிக்கிறாள். அவளுக்கு மெர்லின் என்று ஒரு பெண்பிள்ளை. மரியத்தின் நிலையைப் புரிந்துக் கொள்ளாத எம் சமூகம் அவளை வேசை என்று வசைபாடுவதுடன் திருச்சபையிலிருந்தும் விலக்கி விடுகிறது.

ஆணாகப் பிறந்திருந்தாலும் ஆணாகவோ பெண்ணாகவோ உணரப்படாத நிலையில் தன் தந்தையினால் பழிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட மேற்கத்தேய வெள்ளையர் ஒருவன் வீட்டிலிருக்க முடியாமல் திருச்சபையில் சேர்ந்து பின் சுனாமி அழிவுகளில் இடிந்து போன தேவாலயத்தை நிர்மாணிக்கும் பணிக்காக இலங்கை வருகிறான். அந்தநேரம் அங்கு சமையல்காரியாக பணிபுரிந்த றோசம்மா நோயுற்றிருந்ததால் மரியம் அவனுக்கு பணிவிடைகள் செய்ய அமர்த்தப்பட்டாள். அந்த வெள்ளையர் மரியத்துடன் எந்தப் பாரபட்சமுமின்றிச் சமனாக அவளை நடத்திய தன்மை அவளைப் பூரிக்க வைத்தது. நட்புடன் பழகி பணி முடிந்து அந்த வெள்ளையர் ஊர் திரும்பிய சில நாட்களில் மரியம் கருத்தரித்திருப்பதை ஊர் அறிந்து அவள் வெள்ளையனுடன் தொடர்புற்று வாங்கிய பிள்ளையை வயிற்றில் சுமப்பதாக அவள் மீதான அவதூறுகளை ஊரெல்லாம் விதைத்தனர்.

அவள் கர்ப்பமாக இருக்கும் போதே நோய்வாய்ப்பட்டு குழந்தையை குறை மாதத்தில் பெற்றெடுத்து சொற்ப காலத்தில் இறந்து போகிறாள். அந்தக் குழந்தைதான் இக் கதையின் முற்பகுதியில் கூறப்படும் சுள்ளான். அவனது சூத்தாமட்டியின் மீது ஏறியிருக்கும் தசைத் துண்டத்தில் அதிகளவு மயிர்களுடன் ஒரு மாங்காய் மச்சம் இருந்தது. மரியம் இறந்தபின் றோசம்மா மரியத்தின் குழந்தைகளுக்கு ஆதரவாக இருக்கிறாள்.

சுள்ளானுக்கு பற்றைகளில் தும்பி பிடிப்பது என்பது அலாதி விருப்பம். ஒருநாள் ஒரு பச்சைத் தும்பியைப் பிடித்த சந்தோசத்தில் கடற்கரைக்கு ஓடிவந்தவனுக்கு ஊர்ச்சனங்கள் அங்கு கூடியிருப்பது வியப்பாக இருந்தது. மெர்லின் முழங்காலிலிருக்க வைக்கப்பட்டிருந்தாள். றோசம்மாள் பாதிரியாரை ஒரு புருஷன் நிறை வெறியில் எப்படி பெண்டாட்டியை

அடிப்பானோ அப்படி ஆத்திரம் பொங்க அடித்துக் கொண்டிருந்தாள். அவள் அப்பாவிக் குழந்தையை நீ நாசமாக்கி விட்டாய் என்று கேட்டுக்கேட்டு அடித்தாள்.

பாதிரியார் உடை கிழிந்து நிலத்தில் புரண்டார். அவரின் சூத்தாமட்டியின் மீது ஏறியிருக்கும் தசைத்துண்டத்திலும் அதிகளவு மயிர்களுடன் ஒரு மாங்காய் மச்சம். என்று முடியும் இந்தக்கதையில் ஆங்காங்கே பொருத்தமான பைபிள் வரிகள் பொருத்தப்பட்டிருப்பது சிறப்பாக இருப்பினும் ஒரு குறிப்பிட்ட மதத்தை பாதிக்கும் வகையில் இந்தக்கதை எழுதாமல் வேறுவழியில் கதையை நகர்த்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. வட்டார வழக்குச் சொற்களைத் தவிர்த்தால் இவரின் படைப்புகளை அனைவரும் வாசித்து இலகுவாக விளங்கிக் கொள்ளலாம் என்பது எனது தாழ்மையான கருத்து.

எல்லா மச்சங்களும் பரம்பரையலகுகளின் ஊடாகக் கடத்தப்படாது என்பதை நன்கு தெரிந்து கதைசொல்லி அதிக மயிர்களுடனான மாங்காய் மச்சத்தை வைத்துச் சாதுரியமாகக் கதை புனைந்திருக்கிறார்.

பிறப்புரிமை என்பது பிறப்புரிமையியல் காரணிகள் மற்றும் சூழற் காரணிகள் சார்ந்து உருவாவது. அதில் இரண்டினதும் பங்கு உள்ளது. உடலில் மெலனினைப் படியவைக்கும் தோலிலுள்ள மெலனின் குழியங்களின் திரட்சி பாரம்பரியம் சார்ந்தும் ஏற்படலாம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

மேலும் கதைசொல்லி ஒரு மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த்தொழிநுட்ப மாணவன் என்பதையும் இங்கு பகிர்கிறேன். அத்தோடு இங்கு ஒரு இடத்தில் கூட ரோ.்.மன் பாதரிடமிருந்துதான் குறித்த மச்சம் குச்சானுக்கு கடத்தப்பட்டது என்று கூறப்படவில்லை.

ஜேக்கப்பிற்கு உள்ளங்கை வியர்ப்பது போலவும் அவனுக்கு பூனைக்கண்கள் இருப்பது போலவும் குச்சானுக்கு ஏற்படுவதையும் கதை கூறுகிறது. அதேநேரம் மரியத்திற்கும் பூனைக்கண் என்று குறிப்பிடப்படுகிறது.

கைவியர்ப்பதற்குப் பல காரணிகள் இருக்கலாம். இதில் குச்சானின் தகப்பன் யார் என்பது நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. மையத்தை மட்டும் வைத்துக் கொண்டு முடிவுக்கு வர எத்தனிக்கும் வாசகர்ளால் விளிம்பை அறியமுடியாது. இங்கு மையம் குச்சான் ரோமன் ப.்.தரின் மகன் என்பது. விளிம்பு ஜேக்கப்பின் மகன் என்பது. (மாறியும் யோசிக்க இடமுண்டு) பின் நவீனத்துவம் என்ன கூறுகின்றது என்றால் மையமும் விளிம்புமற்ற நிலை கதைகளில் காணப்படுவது என்பது.

இந்தக்கதை மையம்/விளிம்பு எதுவென்று கூறலாமல் முடிகிறது. உள்நாட்டு வாழ்க்கை, வெளிநாட்டு வாழ்க்கை, கரும்புத்தோட்ட கூலி வாழ்க்கை, விபசாரியாக வாழ்தல், பாலியல் பிறழ்வுகள் தரும் உணர்வுச் சிக்கல்கள் என கதைசொல்லி இந்தக் கதையைப் பல தளங்களினூடாக நகர்த்திச் செல்வது சிறப்பு. மொத்தத்தில் நல்லதொரு கதையை வாசித்த உணர்வைத் தோற்றுவித்த சிறுகதை.

**ஆக்கம்:**
**பவானி**
**நெதர்லாந்து**
**முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்**

## இளம் கலைஞர் அறிமுகம்

# சமூக வலைத்தள பிரபலமாக வலம் வரும் அக்ஸான்



இயற்கை வளம் நிறைந்த இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் குட்டிக்கேரளா என வர்ணிக்கப்படும் அட்டாளைச்சேனை மண்ணில் அலாவுதீன், உம்முரசீதா தம்பதிகளுக்கு 2 ஆண் குழந்தைகள் 2 பெண் குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் மூன்றாவது மகனாய் 2001.01.26ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியினை அக்கரைப்பற்று அரசினர் முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயத்தில் பயின்ற இவர் இஸ்லாம் மார்க்க கல்வியில் ஆர்வம் கொண்டு, 2015 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை கிழக்கிலங்கை அரபுக்கல்லூரியில் பயின்று ஸர்க்கி எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். சிறுவயதிலிருந்தே மக்கள் மனதில் இடம்பிடிக்க வேண்டும் என்பது இவரது நீண்ட நாள் கனவாக இருந்தது. அதற்கான பயிற்சியிலும் முயற்சியிலும் ஈடுபட்டு வந்த வேளையில் உலகையே உலுக்கிய கொரோனா வைரஸ் இவர் வாழ்வையும் மாற்றியது எனலாம்.

எப்படி மாற்றியது என்று கேட்டால் வீட்டிலே முடங்கியிருந்த காலப்பகுதியில் தனக்கென ஒரு முகநூல் பக்கத்தை ஆரம்பித்து சில பயனுள்ள தகவல்களை தரும் காணொளிகளை பதிவேற்றம் செய்து வந்த போது அதில் 40 நாளான குழந்தையின் உடலம் எரிக்கப்பட்ட விடயம் தொடர்பாக ஒரு கவிதையினை தனது பாணியிலே பதிவேற்றம் செய்த வேளையில் அது மக்கள் மத்தியில் பெரும் ஆதரவினை கொடுத்ததோடு மக்கள் இந்தக்குரலின் சொந்தக்காரன் யார் என தேட ஆரம்பித்தனர். அதுவே அவர் வாழ்வை மாற்றியது. அடுத்து தனக்கென ஒரு யூடியூப், டிக்டொக், இன்ஸ்டாகிராம் என அனைத்து சமூக








வலைத்தளங்களிலும் Akshan Vlog எனும் நாமத்தோடு கால் பதித்து சில காலங்கள் கடந்த பின்னர் பல சோதனைகளையும் கடந்து சாதனைகளாக மாற்ற ஆரம்பித்ததோடு தன்னை எதிர்த்து வந்த நக்கல், நையாண்டி, வளர்ச்சியை தடுக்கும் வகையிலான பின்னூட்டங்கள் அனைத்தையும் ஏணிப்படிகளாக மாற்றி தன் பாதையில் வெற்றிக் கண்டார்.

இன்று இவரது முகநூலில் 105K பின் தொடர்பவர்கள் மற்றும் டிக்டொக்கில் 70K பின் தொடர்பவர்கள் என மொத்தமாக இரண்டு இலட்சத்துக்கு அதிகமான பின் தொடர்பவர்களை பெற்றுள்ளார். தனது வித்தியாசமான பாணியிலே வர்த்தக நிலையங்கள், விசேட சலுகைகள், விலைக்கழிவுகள் என அனைத்தையும் தனது காணொளிகளினூடாக உலகறியச் செய்தார். அதேபோல கிரிக்கெட் நேர்முக வர்ணனை காணொளி, கவிதைக் காணொளி, சமூக சேவை என பல காணொளிகளை பதிவேற்றம் செய்து வருவதோடு, Twin brothers எனும் புகைப்பட நிலையத்தினூடாகவும் தனது சேவையினை வழங்கி வருகின்றார். அன்று சிறியதொரு தொலைபேசியில் ஆரம்பித்த பயணம் இன்று இறை உதவியோடு 16Pro Max வரை சென்றுள்ளது.

முயற்சி செய் உன்னால் முடியும் வரை அல்ல நீ நினைத்தது முடியும் வரை என்ற தூரநோக்கோடு தனது பயணத்தை தொடர்ந்து வருகிறார். ஆரம்ப நாட்களில் அவரது மனதில் தோன்றிய கனவுகளில் 50 வீதம் வரை அடைந்து விட்டார் என்ற போதிலும் தன் கனவுகளில் 100 வீதத்தை அடைய முயற்சிக்கின்றார். தனது திறமைகளுக்கான களங்களுக்காக காத்திருக்காது தனக்கான மேடைகளை தானாகவே தேடிப்பிடித்து இதுவரையில் 23 விருதுகளை பெற்றுள்ளார்.

அதில் 2020இல் சிறந்த குறும் திரைப்பட இயக்குனர் விருது, 2022இல் கலைஞர் சுவதம் விருது, 2022இல் சிறந்த புகைப்பட கலைஞர் விருது, 2024இல் சிறந்த யூடியூபர் விருது, 2025இல் எமது ஸ்கை தமிழ் மீடியா வழங்கிய சிறந்த இன்புளுவென்சர் விருது, 2025இல் தங்கக்குரலுக்கான விருது, 2025இல் influencer guest award என்பவற்றை பெற்றுள்ளார்.



கலைஞராக வலம்வர வேண்டுமென்ற இலக்குகளோடு தனது பயணத்தை தொடரும் இவரது கனவுகள் நனவாகவும் இறை துணையோடு இன்னும் சாதிக்க துணிந்தெழு சஞ்சிகை சார்பில் வாழ்த்துகிறோம்.

**குலசிங்கம் கிலசன்**
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை



# சிறை வாசம்

கவிப்பொய்கை
ஜவ்சன் அஹமட்

அழகான நிஜங்களை நான்
கைதியாக்கி என்னுடன்
சிறைப் பிடித்துவிட

நிஜங்கள் ஓடித்தப்பி அதன்
நிழலைப் பிரதியாக்கி
வியக்க வைக்கின்றன

நிஜங்கள் முக்கியம் என்ற
படியினால்தான் கைதியாக்க
உத்தேசம் கொண்டேன்

நிழல்களும் பரவாயில்லைதான்
ஆனாலும் நகலைவிட அசல்
நிதர்சனத்தால் நிரம்பியது

ஒட்டுமொத்த நிலைகளின்
தூய வெளிப்பாடாகவே இருக்க
நிஜங்கள் தேவை என்கிறேன்

நிஜங்கள் கூட சில நேரங்களில்
ஓடி மறைந்து நிழல்களையே
பகிரங்கப்படுத்துகின்றன.

இங்கு நிழல்கள் ஒரு பக்கம் இருக்கட்டும்
நிஜங்களை கொண்டு வாருங்கள்

நிழல்களை வைத்துக் கொண்டு
நிஜங்களை எப்படி நீங்கள் அழித்து விட
முடியும் நியாயமானதா இது

எப்போது நிஜங்கள் அழிந்து
விட்டதோ அன்றே நிழல்களும் இல்லாமல்
ஆகின்றன.

நிழல்கள் வெறும் பார்வைகளுக்கு
மட்டும் உகந்தவை நிஜங்கள்
யுகத்தை மாற்றும் சக்தி வாய்ந்தவை.

# உபாத்தியன் இன்றி உயர்ந்தவன் இல்லை....!

கல்வியை கருத்தாய் புகட்டுவான்
அறிவீனத்தை தன் நாவால் அகற்றுவான்
உலகிற்கு ஒளியை ஏற்றுவான்
தம் பணியை சிறப்பாய் ஆற்றுவான்

தோழனாக தோள் கொடுப்பான்
சாதனை கொள்ள சபதம் எடுப்பான்
பெற்றோரை போல பராமரிப்பான்
நல் எதிர்காலத்தை நிர்மாணிப்பான்

கடலலை ஓய்ந்தாலும்
கல்வியின் அலை ஓய்வதில்லை
மாணவனாய் சோர்வு கொண்டாலும்
ஆசான் ஓய்வு கொண்டதில்லை

கொக்கு போல கூர்மை இருந்தாலும்
அவன் குறி தவறுவதும் இல்லை
வயது கழிந்து போனாலும்
அறிவு முதுமையாவதுமில்லை

அகம் கெடினும் அவன் முகம் கெடுவதில்லை
துன்பங்கள் பல இருந்தாலும் சொல்லி
அழுவதில்லை

குடும்ப சுமைகள் கூட இருப்பினும்
அவன் இமைகள் ஓய்வுக் கொள்வதில்லை
குறைவான ஊதியம் இருப்பின்
அவன் பணியை குறைத்துக் கொள்வதில்லை

பிரம்பால் உனக்கு அடிப்பதனால்
அது பிழை என்று எண்ணிடாதே
பலர் நல் நிலைக்கு பின்னால் இந்த
பிரம்புமுண்டு மறந்து விடாதே

உபாத்தியன் இன்றி உயர்ந்தவன் இல்லை
ஊதியத்தால் உயர்ந்தவன் உபாத்தியனும்
இல்லை

மாணவனே ஆசான் அருமை விளங்கி
இனியும் இருக்காதே நீ கலங்கி....!

முகமட் ராஷீத்
தோப்பூர்- திருகோணமலை

# இலங்கை பெண்களின் மனநிலை பிரச்சனைகள்





**பர்ஹானா ஹனீபா**
senior Psychological counsellor/ therapist.
Head- school of psychology
Senior Lecturer; Oxford Graduate Campus
Global peace Ambassador/ Human Rights Activist

• இன்று இலங்கை நாட்டில் பெண்களுக்கிடையே மிக பரவலாக காணப்படும் பிரச்சனைகளில் ஒன்றாக மன அழுத்தத்தை குறிப்பிடலாம் அதற்கான காரணங்கள் என்ன?

குடும்ப பொறுப்புகள், சமூக எதிர்பார்ப்புகள், வேலைப்பளுக்கள் மற்றும் கடந்த கால மனவேதனைகள் ஆகியவைகளை தாங்கும் வலிமையை சில சமயம் மன அழுத்தமாக மாற்றுகின்றன.

•இதற்கான சிகிச்சைகளை எவ்வாறு மேற்கொள்வது?

சமீபத்திய ஆய்வுகள் மற்றும் தேசிய கணக்கெடுப்பின் அடிப்படையில் பெண்களில் மனக்குறைகள் பரவலாக இருப்பதையும் பலர் சரியான சிகிச்சை பெறாமல் துன்பப்படுவதையும் காணமுடிகிறது.

அதேபோல் 2019 ம் ஆண்டு பெண்களின் நல ஆய்வின்படி 15 வயதிற்கு மேற்பட்ட திருமணமான அல்லது உறவில் இருக்கும் பெண்களில் 20.4% பேர் வாழ்நாளில் குறைந்தது ஒரு முறை உடல் அல்லது பாலியல் வன்முறையை அனுபவித்துள்ளனர். அதில் பெரும்பாலானவர்கள் உதவி பெற முன்வரவில்லை. ஏன் திருமணமாகி அல்லது இணைந்து வாழும் பெண்களில் 13.2% பேர் தற்கொலை சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

• திருமணமாகி கர்ப்பமடையும் பெண்களும் மன அழுத்தம் மனச்சோர்வுக்கு ஆளாகிறார்களா?

கண்டிப்பாக கர்ப்பிணி பெண்களில் சுமார் மூவரில் ஒருவர் தீவிர மனச்சோர்வு அறிகுறிகளை அனுபவிக்கிறன்றனர்.

கொழும்பிலுள்ள இரண்டு பெரிய மகப்பேறு மருத்துவமனைகளில் 33.6% கர்ப்பிணிகள் மனச்சோர்வுடன் இருப்பதாக கண்டறியப்பட்டது.

• அவ்வாறான பெண்கள் பிரசவத்திற்கு பிறகு மன அழுத்தத்தில் இருந்து மீள்வதற்கு சாத்தியங்கள் உள்ளனவா?

நிச்சயமாக இல்லை என்று தான் கூற வேண்டும். ஏனெனில் குழந்தை பிறந்த பின் 1–6 மாதங்களுக்குள் உள்ள தாய்மார்களில் 22.9% பேர் பிரசவத்திற்குப் பிந்தைய மனச்சோர்வுடன் இருந்தனர்.
இந்த எண்ணிக்கை குறிப்பாக கர்ப்பக்காலமும் பிரசவத்திற்கு பிந்தைய காலங்களும் பெண்களுக்கு மிகுந்த அபாயகரமான காலங்கள் என்பதை காட்டுகின்றன.

• கர்ப்பிணி பெண்களின் மன அழுத்தங்களுக்கான காரணங்களை சற்று விளக்க முடியுமா?

நிச்சயமாக நிறையவே இருக்கிறது. உறவுகளின் அழுத்தம், ஆதரவு இல்லாமை, வன்முறைகள், மதுவிற்கு அடிமையான கணவன், சுகாதார சிக்கல்கள், உயர் இரத்த அழுத்தம், கர்ப்பகாலத்தில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவைகளை குறிப்பிடலாம்.

• இவைகளில் இருந்து விடுபட என்ன ஆலோசனைகள் கொடுக்கலாமே?

• சமூக அடிப்படையிலான மனநல சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும்
• கர்ப்பிணி மற்றும் பிரசவத்திற்கு பிந்தைய தாய்மார்களின் மனச்சோர்வுக்கு பரிசோதனைகளை பரவலாக மேற்கொள்ள வேண்டும்.
• கிராமப்புற பிரதேச உதவியாளர்கள் மற்றும் சமுதாய சுகாதார பணியாளர்கள் மனநல விழிப்புணர்வில் பங்கு கொள்ள வேண்டும்.

• இதற்காக நாம் தேசிய அளவில் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?

நான் ஏற்கனவே கூறியது போல இதை நாம் கர்ப்பகாலத்தை மட்டுமே மையமாக பார்க்காமல் பொதுவான நோக்குடன் பார்த்தோமானால்,

• மருத்துவ சேவைகளை மேம்படுத்தலாம்.
• வன்முறை தடுப்பு முறைகளை கையாள முடியும்.
• பாதுகாப்பான புகார் மையங்களை உருவாக்கலாம்.
• பெண்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தலாம்.
• வேலை வாய்ப்புகள், கல்வி வாய்ப்புகளை வழங்க வேண்டும்.
• மனநலம் குறித்த விழிப்புணர்வுகளை திறந்த வெளியில் உரையாட ஊக்குவிக்கலாம்.

• ஆம், இது போலவே ஒவ்வொரு தனிநபரும் மன அழுத்தத்தை எதிர்கொள்ள எப்படியான வழிமுறைகளை கையாள வேண்டும்?

கண்டிப்பாக, நீண்ட கால சோகங்கள் தூக்கமின்மை, தற்கொலை எண்ணங்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை கண்ணுற்றால் அல்லது தனக்கே இவ்வாறான நிலை ஏற்பட்டால் நம்பகமான ஒருவரிடம் பகிர்ந்து கொள்ளவேண்டும். தேவைப்படின் மனநல நிபுணர்களை அணுகலாம்.சமூக ஆதரவுகளை அமைக்க முடியும். ஓய்வு, உடற்பயிற்சி, பிரார்த்தனை, பொழுதுபோக்கு போன்ற சுய பராமரிப்புகளை உருவாக்க முடியும்.

• இறுதியாக நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இலங்கை பெண்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் முதுகெலும்பாக உள்ளவர்கள். அவர்களின் மனநலம் புறக்கணிக்கப்பட கூடாது. அதிகரித்து வரும் மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள், கர்ப்பகால மனநல பிரச்சனைகள் ஆகியவற்றை சமாளிக்க அரசாங்கம் சுகாதார நிபுணர்கள், சமூக தலைவர்கள் மற்றும் ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பேற்க வேண்டும்.

பெண்களின் மனநலத்தை பாதுகாப்பது குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் பாதுகாப்பதாகும்.

**நேர்காணல்:**
**றிஹானா அன்வர்ஷா இஷாக்**
**(கலாவிபூஷணம்)**



# நான் வாக்களித்தேன்

## அரபு மொழிப்பெயர்ப்பு கவிதை: நிஸார் கப்பானி

நான் வாக்களித்தேன்
உன்னைக் காதலிக்கப் போவதில்லை என்று
உனக்கு நான் வாக்களித்தேன்
பின்னர் அந்தப் பெரிய தீர்மானத்துக்கு முன்னால்,
நான் கோழையானேன்
நான் மீண்டும் வர மாட்டேன் என்றேன்
ஆனாலும், நான் மீண்டும் வந்தேன்

காதலால் நான் மரணிக்க மாட்டேன் என்று
நினைத்தேன் ஆனாலும், மரணமானேன்
பல தடவைகள் வாக்களித்தேன்
நான் தனித்து சுதந்திரத்தோடு இருக்க வேண்டும்
என்று பல தடவை தீர்மானித்தேன்
இதுவரை சுதந்திரம் பெற்றதாக எனக்கு நினைவில்
இல்லை என்னை விடப் பெரியவற்றை வாக்களித்தேன்
நாளை பத்திரிகைகள் என்னைப் பற்றி என்ன
பேசுமோ?

நான் பித்தனாக மாறினேன் என்று
நிச்சயம் அவை கூறும்
நான் தற்கொலை செய்து கொண்டேன்
என்று அவை சொல்லும் நான் பலவீனமாக
இருக்க மாட்டேன் என்று உனக்கு வாக்களித்தேன்
ஆனால் அப்படித் தான் இருந்தேன்.

உனது கண்ணிரண்டையும் பார்த்துக் கவிதை சொல்ல
மாட்டேன் என்றேன் ஆனாலும் சொன்னேன்
எனது பித்துத்தனம் எனக்குத் தெளிவான போது
நானே சிரித்துக் கொண்டேன்
நீ என்னைக் கடந்து போகையில்
உனது கேசத்தை நான் பொருட்படுத்த மாட்டேன்
என்றேன் உன் கேசம் அலை அலையாக தோன்றிய
போது சத்தமிட்டுக் கவிதை பாடினேன்

காதல் பிரவாகித்தாலும் உன் கண்ணிரண்டையும்
பார்க்க மாட்டேன் என்றேன்
உன் விழி இரண்டும் நட்சத்திங்களை உதிர்வதைக்
கண்ட போது உன் விழிகளை அள்ளிக் கொண்டேன்
உனக்குக் காதல் கவிதை அனுப்ப மாட்டேன் என்றேன்
என்றாலும் அனுப்பினேன்.

நீ இருக்கும் எந்த இடத்திலும் நான் இருக்க
மாட்டேன் என்றேன் நீ இராப்போசனத்துக்கு
அழைக்கப்பட்டிருக்கிறாய் என்றறிந்தபோது நானும்
வந்தேன்.

எங்கும் எப்படியும் உன்னைக் காதலிக்க மாட்டேன்
என்றேன் ஆனாலும் அதில் பொய் சொன்னேன்
உண்மையின் உச்ச நிலையில் பொய் சொன்னேன்
படைத்தவனுக்கே எல்லாப் புகழும்
நான் பொய் சொன்னேன்.

**இம்தியாஸ்(நளீமி)**

# என் இனியவளே...

மெல்லமாய் ஒரு மென்மையான பொழுதின் மடியில் இருந்தவளாய் இம்மடலை உன் நாவினில் வரைகின்றேன்.

உன் விழிகள் வியக்கும் உனக்கான விதியை நான் உணர்கின்றேன். கனமாகும் இதயத்தை கனவுலகக் காட்சிகளில் கரைக்க கங்கணம் கட்டும் என் முகவரி அறியா தோழியே...

உன் இதயத்தின் ஓசையை ஆழிப் போல் ஆழ்ந்து பார் அதிலே இசைப்பது முத்துக்களும் வைரங்களும் தான் உன் செப்பனிட்ட மொழிகள் கொண்டும் விரலசைவின் ஆணைக் கொண்டும் உன் ஆன்மாவுக்கு நீ எஜமானாக மகுடம் சூடிக் கொள் எதிரில் எதிர்க்கும் கருமேகங்களால் கனம் கொண்டு கனமழை பொழிந்து தரையில் உன் மண் வாசனையைப் பரப்பி விடு தோழியே...

வானவில் எப்போதும் ஜொலிப்பதில்லை அதேபோல் தான் நீயும் எப்போதும் ஜொலிப்பதில்லை இதை நீ மறுத்தாலும் யதார்த்தம் அதுவே...

வானவில்லின் தோன்றலின் போது அது கொண்டாடப்படுவது போல் நீயும் உனதான ஒளி வீச்சின் போது கொண்டாடப்படுவாய் அப்போது விண்ணில் தடம் பதித்து வரலாற்றை எழுதிவிடு பெருக்கெடுக்கும் நதி கூட ஒரு நாள் பெருவெள்ளமாய் மாறிவிடும் அதேபோல் அதே நதி போல் வெள்ளத்துக்காய் காத்திரு...

நீ தேடிச் செல்லும் உனது பாதை ஒருநாளும் உன் கண்முன்னே வந்து திறக்கச் சொல்வதில்லை மாறாக நீ ஓடும் வேகத்துக்கு ஈடு கொடுத்து அதுவும் ஓடிவிடும் அதை நீ தான் எட்டி நின்று பற்றிப்பிடித்து தட்டித்திறக்க வேண்டும்.

அக்கதவுகள் திறக்கப்படும் அந்நாழிகைத் துளியில் மென்மையான தென்றலின் நடுவே அசைந்தாடும் மல்லிகை வாசத்தின் நுகர்வை நீ உணர்வாய்...

பச்சைப் புற்களின் ஈரமான பனித்துளியின் இதமான சுகத்தை உன் வெற்றிக் கதவுகள் உன்னை உணர வைக்கும் அதுவரை வேகத்தை விவேகமாய்க் கொண்டு நீண்ட தூர ரயில் பயணமாய் வனங்களையும் பாறைகளையும் தாண்டிச் சென்றுவிடு..


உனக்கான மகுடம் உன் சிரசுக்கே அடிபணியும்...

பாத்திமா ரதானா
கஹட்டோவிட்ட

# எனது விழிகள்

## கருப்பொருள் : பயணம்

இம்மாத சிறந்த புகைப்படம்




எம்.ஜே.எப். றமீஸா – வெளிமடை



சஜீத் அஹமட் – அட்டாளைச்சேனை



கோவிந்தராஜ் – கத்தார்




மதவராஜா நிதுர்க்ஷன் – கல்முனை



நஜிமுதீன் ஹுசைன் – சவூதி அரேபியா



சி.எஸ்.எப். நஸா – நகொல்லகொட




அப்துல் பத்தாஹ் – சென்னை



நப்ரித் – புத்தளம்



முஹம்மட் ஹாரீஸ் – கத்தார்



எம்.எப்.சஹ்னாஸ் – மன்னார்



# தற்கால உலகை நிர்வகிக்கும் நவீன தொழில்நுட்பம்

இன்றைய உலகம் கடந்த காலத்தை விட வேறுபட்டது. அறிவியல், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, மருத்துவம், கல்வி, அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மனித வாழ்க்கையை முற்றிலும் மாற்றியமைத்துள்ளன. மனிதன் தனது அறிவாற்றலை பயன்படுத்தி கண்டுபிடிப்புகள் செய்ததால் உலகம் நாளுக்கு நாள் புதுமைகளை கண்டுவருகிறது. இதனைத்தான் நாம் நவீன உலகம் என்று அழைக்கிறோம்.

தொழில்நுட்ப வளர்ச்சியானது நவீன உலகின் முதன்மையான அடையாளம் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகும். முன்னொரு காலத்தில் மனிதன் கடிதம், தபால், தூது போன்ற வழிகளில் தொடர்பு கொண்டிருந்தான். இன்று தொலைபேசி, இணையம், சமூக வலைத்தளம், வீடியோ அழைப்பு ஆகியன உலகத்தை ஒரு கிராமமாக மாற்றிவிட்டன.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence, இணையம் (Internet), ரோபோடிக்ஸ் (Robotics) போன்றவை மனிதனின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்குகின்றன. இன்று வீடுகளை நிர்வகிக்கக்கூட “ஸ்மார்ட் ஹோம்” சாதனங்கள் பயன்படுகின்றன. மருத்துவத் துறையில் கூட ரோபோட்கள் மூலம் அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

கல்வி மற்றும் அறிவாக முன்னொரு காலத்தில் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருந்தன. ஆனால் நவீன உலகில் அறிவைப் பெறுவது எளிதாகியுள்ளது. இணையம், கணினி, டேப்லெட், மொபைல் போன்றவற்றின் உதவியால் உலகின் எந்த மூலையிலும் உள்ள அறிவையும் சில வினாடிகளில் பெற முடிகிறது.

ஆன்லைன் வகுப்புகள், டிஜிட்டல் நூலகம், வீடியோ பாடங்கள் போன்றவை மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளைத் திறந்துள்ளன. “மெய்நிகர் வகுப்பு அறை” (Virtual Classroom) என்ற கருத்து இன்றைய உலகின் கல்வி முறையை முற்றிலும் மாற்றியமைத்துள்ளது.

சமூக முன்னேற்றங்களாக நவீன உலகம் சமூகத்தில் பல நல்ல மாற்றங்களையும் கொண்டு வந்துள்ளது. மனித உரிமைகள், பெண்களின் அதிகாரம், குழந்தைகள் உரிமை, சமூக சமத்துவம் போன்றவை வலுவடைந்துள்ளன.

பெண்கள் கல்வி, வேலை, அரசியல், விளையாட்டு போன்ற எல்லா துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். முன்னொரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட பல சமூகங்கள் இன்று தங்களது உரிமைகளுக்காக குரல்

கொடுக்கின்றன. சமூக ஊடகங்கள் மக்கள் குரலை அரசாங்கங்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளன.

மருத்துவ வளர்ச்சியை பொறுத்தவரை மருத்துவத் துறையின் வளர்ச்சி நவீன உலகின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகும். முந்தைய காலத்தில் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்த பல நோய்களுக்கு இன்று தடுப்பூசிகள், மருந்துகள், அறுவை சிகிச்சைகள் கிடைக்கின்றன.

டிஎன்ஏ பரிசோதனை, ஆர்டி∴பிஷியல் ஆர்கன், ஜீன் எடிட்டிங், டெலிமெடிசின் போன்ற முன்னேற்றங்கள் மனித வாழ்க்கையை நீடிக்கச் செய்கின்றன. கருவுற்ற தாயின் உடல்நிலையையும் குழந்தையின் வளர்ச்சியையும் தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்க முடிகிறது.

பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்புகளை எடுத்துக் கொண்டால், நவீன உலகம் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. “தகவல் தொழில்நுட்பம்”, “பன்னாட்டு வணிகம்”, “டிஜிட்டல் மார்க்கெட்டிங்”, “∴ப்ரீலான்சிங்”, “கிக்எகானமி” போன்றவை இன்றைய இளைஞர்களுக்கு புதுமையான வாய்ப்புகளைத் தந்துள்ளன.

அதே நேரத்தில், உலகளாவிய போட்டியும் அதிகரித்துள்ளது. வேலை வாய்ப்புகளில் திறமை, புதுமை, தொழில்நுட்ப அறிவு ஆகியவை அவசியமாகியுள்ளன.

சுற்றுச்சூழல் சவால்களான நவீன உலகின் வளர்ச்சி சுற்றுச்சூழலுக்கு பல தீமைகளையும் ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகள், வாகனங்கள், பிளாஸ்டிக் பயன்பாடு, மரம்வெட்டுதல் போன்ற காரணங்களால் காற்று மாசு, நீர் மாசு, நில மாசு அதிகரித்துள்ளது.

காலநிலை மாற்றம் (Climate Change) இன்று உலகின் மிகப்பெரிய சவாலாக



உள்ளது. பனிமலைகள் உருகுதல், கடல் மட்ட உயர்வு, புயல்கள், வெள்ளம், வரட்சி போன்றவை மனித வாழ்க்கையை அச்சுறுத்துகின்றன. நவீன உலகம் வளர்ச்சியுடன் சுற்றுச்சூழலையும் காக்கும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

பண்பாட்டு மாற்றங்களை எடுத்துக்கொண்டால், நவீன உலகம் உலக மக்களை ஒரே பண்பாட்டு ஓட்டத்தில் கலந்து விடுகின்றது. திரைப்படங்கள், இசை, விளையாட்டு, ஆடை அலங்காரம், உணவு பழக்கம் போன்றவை உலகளாவிய அளவில் பரவுகின்றன.

இணையம், தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் மூலம் ஒரு நாட்டின் பண்பாடு இன்னொரு நாட்டில் சில நொடிகளில் பரவுகிறது. இது நல்லதொரு கலாச்சார பரிமாற்றத்தை ஏற்படுத்தினாலும், சில சமயம் உள்ளூர் மரபுகள் மற்றும் பண்பாடுகள் மறைந்து போகும் அபாயமும் உண்டு.

அரசியல் மற்றும் உலக உறவுகளைப் பொறுத்தவரை நவீன உலகத்தில் நாடுகள் ஒன்றுக்கொன்று சார்ந்தவையாக ஆகிவிட்டன. சர்வதேச வர்த்தகம், பன்னாட்டு அமைப்புகள், இணைய வலைத்தளங்கள், தூதரகம் போன்றவை நாடுகளுக்கு இடையே உறவை வலுப்படுத்துகின்றன.

அதே சமயம், போர், பயங்கரவாதம், இன




அழிப்பு, அகதிகள் பிரச்சினை போன்றவை இன்னும் உலகை சிக்கலாக்குகின்றன. “உலகம் எல்லோருக்கும் சொந்தம்” என்ற எண்ணத்தை வளர்ப்பது மட்டுமே இச்சவால்களை குறைக்கும் வழி ஆகும்.

நவீன உலகின் இரு முகங்கள் உள்ளன. நவீன உலகம் மனிதனுக்கு வசதியையும் முன்னேற்றத்தையும் தந்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் புதிய பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது.

நன்மைகள்:
தகவல் தொடர்பில் வேகம், மருத்துவ முன்னேற்றம், கல்வியில் புதிய வாய்ப்புகள், சமூக விழிப்புணர்வு, மேலும் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பு போன்றவையாகும்.

தீமைகள்:
சுற்றுச்சூழல் அழிவு, தொழில்நுட்ப அடிமைத்தனம், மனநல பாதிப்புகள், இணைய குற்றங்கள் மற்றும் பண்பாட்டு சிதைவு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நவீன உலகம் என்பது வாய்ப்புகளும் சவால்களும் கலந்த ஒரு மேடையாகும். அறிவியல், தொழில்நுட்பம், கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளின் வளர்ச்சியால் மனித வாழ்க்கை வசதியாக மாறியிருக்கிறது.

ஆனால், அந்த முன்னேற்றத்தை மனிதன் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தாவிட்டால், அது மனித குலத்தையே அழிக்கும் ஆற்றல் உடையதாகும்.

ஆகவே, நவீன உலகின் உண்மையான வெற்றி என்பது அறிவியல் முன்னேற்றத்தையும், இயற்கைச் சூழலையும், மனித மதிப்புகளையும் சமநிலைப்படுத்திக் காக்கும் திறமையில் தான் உள்ளது. நாமும் நவீன உலகின் வாய்ப்புகளைச் சரியான முறையில் பயன்படுத்தி, எதிர்கால சந்ததிக்கு ஒரு ஆரோக்கியமான, சமத்துவமான, அமைதியான உலகத்தை அளிக்க வேண்டும்.

**ஆக்கம்:**
**சுபியானி பாரூக்**
**புத்தளம்**

# கத்தார் மன்னருக்கு கிடைத்த ஜோர்தான் அரசின் உயரிய விருது



கத்தார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி மற்றும் ஜோர்தான் மன்னர் அப்துல்லா பின் அல்-ஹுசைன் II ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் புதன்கிழமை (17) அம்மானில் உள்ள பாஸ்மான் அரண்மனையில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கிடையிலான சகோதரத்துவ உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பிராந்திய முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்கள் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டன. இந்த நிகழ்வின் போது, கத்தார் மன்னர் அல் தானிக்கு, ஜோர்தான் அரசின் உயரிய விருதான "அல் ஹுசைன் பின் அலி ஆணை" (Order of Al Hussein bin Ali), மன்னர் அப்துல்லா II அவர்களால் வழங்கப்பட்டது. இது ஜோர்தானின் உயரிய இராஜ்ஜிய விருதாகும் மற்றும் உலக தலைவர்களுக்கு வழங்கப்படும் மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்படுகிறது.

மேலும், கத்தார் மக்களுக்கான தனது உறுதியான ஆதரவை மீண்டும் வலியுறுத்திய மன்னர் அப்துல்லா II, சமீபத்திய இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக கத்தார் எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

# ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மருதாணிப் போட்டியில் முதல் இடத்தை வென்ற ரம்லா அப்ஸல்தீன்




கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட அப்ஸல் மற்றும் ஷிபானியா ஆகியோருக்கு பிறந்த புதல்வியே ரம்லா ஆவார். இவர் இல்மா இன்டர்நேஷனல் பெண்கள் பாடசாலை மற்றும் நார்த் வியூ கல்லூரியில் கல்வி பயின்றிருக்கிறார். இவர் @Party.henna_ இன் நிறுவனராக செயல்படுகிறார். மேலும், இவர் கற்றுக் கொண்டு தொடர் பயிற்சியின் மூலம் தொழில்முறை மருதாணி வடிவமைப்பில் திறமை பெற்றவராக காணப்படுகிறார். இவரது மருதாணித் துறையில் சிறப்பு நிகழ்ச்சிகளில் மற்றும் திருமண வைபவங்களில் மணமகளுக்கு ஃப்ரீலான்ஸ் மருதாணிக் கலைஞராக விளங்குகிறார்.

இவரது சாதனைகளாக 15 வயதிலே தொழில்ரீதியான மருதாணி கலைஞராக வளர்ந்து வரும் இவருக்கான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்கி மேம்படுத்திக் கொண்டார். 2024இல் நடைபெற்ற அகில இலங்கை மருதாணிப் போட்டியில் முதல் இடத்தை பெற்றதோடு, 2024இல் அகில இலங்கை மருதாணி கண்காட்சியில் முதல் இடத்தைப் பெற்றார். மேலும், ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட மருதாணிப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்றார். கல்வி கற்றுக் கொண்டே மருதாணி துறையில் சிறந்து விளங்குவது இவருக்கு கடினமாக இருந்தாலும், சிறந்த அர்ப்பணிப்புடன் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவினாலும் நண்பர்களின் மற்றும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினாலும்இச்சவாலை திறம்பட கடந்து வந்தார்.

இவரது இலக்குகளாக, சர்வதேச அளவில் பிரபலமான மருதாணி கலைஞராக உருவாக வேண்டும். இவரது சொந்த மருதாணியினை தனித்துவ அடையாளமாக மாற்ற வேண்டும்.

இளம் பெண்கள் தங்கள் கனவுகளை தைரியமாக பின்பற்ற ஊக்குவிப்பது போன்றவையாகும். 2025ஆம் ஆண்டில் ஸ்கை தமிழின் ஒரு பாகமாக இயங்கி வரும் ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மருதாணிப் போட்டியில் முதலிடத்தை பெற்றமைக்கு எமது ஊடகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட மருதாணிப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்ற பாத்திமா ஹுஸ்னா




கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட ஹுசைன் மற்றும் ரபீனா ஆகியோருக்கு பிறந்த புதல்வியே பாத்திமா ஹுஸ்னா ஆவார். பாடசாலைக் கற்கையினைப் பூர்த்தி செய்த இவர், வீட்டிலிருந்தே சுய தொழிலாக மருதாணி வகுப்புக்களை நடாத்தி வருவதுடன் மருதாணி கோன்களையும் விற்று வருகிறார்.

பல கஷ்டங்களைத் தாண்டி கல்வியினைக் கற்றுக் கொண்ட இவர், தனக்கான ஒரு சுய தொழிலை வகுப்புக்களை நடாத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானங்களை வைத்து ஆரம்பித்தார்.

தாயின் பூரண உதவியோடு பல தடைகளைத் தாண்டி இத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் இவர், சர்வதேச அளவில் பிரபலமான மருதாணி கலைஞராக உருவாக வேண்டும் என்பதே இவரது இலக்காகும். சுயமாக தனக்கென ஓர் அடையாளத்தை மருதாணி துறையில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இவரது ஆசையாகும்.

இவரது திறமைகளை husnas__henna எனும் இன்ஸ்டாகிராம் பக்கத்தினூடாக பார்வையிடலாம். பல மருதாணிப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

2025ஆம் ஆண்டில் ஸ்கை தமிழின் ஒரு பாகமாக இயங்கி வரும் ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மருதாணிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்கு எமது ஊடகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட மருதாணிப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற பாத்திமா மிப்ரா




பாத்திமா மிப்ரா என்பவர் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் முஆத் மற்றும் குரைசியா ஆகியோருக்கு பிறந்த புதல்வியாவார்.

உயர்தரத்தில் கலைப் பிரிவில் கற்றுத் தேர்ச்சி பெற்ற இவர், ஆறு வருட சிறந்த அனுபவத்தை மருதாணி துறையில் பெற்றிருக்கிறார். மருதாணி தவிர கேக் மற்றும் தையல் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்.

மருதாணித் துறையில் இடம்பெற்ற நான்கு போட்டிகளில் பங்குபற்றி ஒன்றில் மூன்றாம் இடத்தையும், இன்னொன்றில் இரண்டாம் இடத்தையும், இன்னும் இரண்டு போட்டிகளில் முதல் இடத்தையும் பெற்றிருக்கின்றார்.

இவர் திருமணமான குடும்பப் பெண் என்ற வகையில் பல சவால்களை கடந்து முன்னேறியுள்ளார். இதன்போது குடும்ப உறுப்பினர்கள் துணையாக நின்று ஊக்கப்படுத்தியுள்ளனர்.

சுயமாக தனியார் நிறுவன உரிமையாளர் ஆக வேண்டும் என்பதே இவரது சிறந்த இலக்காகும்.

2025ஆம் ஆண்டில் ஸ்கை லங்கா கல்லூரியினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மருதாணிப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றமைக்கு எமது ஊடகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

# உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249

